





அறைவு 02 இயம் 08

Sept 28 - Oct 4, 2013

# மலைமுரசு

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்


# 13ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் வில்லூன்றிக் கந்தன் முன்றலில்..


பேராசிரியர் சி. பத்மநாதன்

திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலின் வாசலில் இடது புறமாக நிலத்தில் கிடக்கும் இரண்டு தூண்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திரு. சி. பத்மநாதன் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

கிழக்கெங்கும் பிரயாணம் செய்துவரும் பேராசிரியர் குழுவினர் சமயம் தொடர்பான கருத்தரங்குகளை மாணவர்களுக்காக வழங்கிவரும் அதே வேளை ஓய்வு நேரங்களில் கல்வெட்டுக்கள் தொடர்பான ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர்களது ஆராய்ச்சியின்





போதே வில்லூன்றிக் கந்தன் ஆலயத்தில் இவ்விரண்டு கல்வெட்டுக்களும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இக்குழுவில் தமிழ்நாட்டின் தொல்பொருளியல் திணைக்களத்தில் பல தசாப்தங்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கலாநிதி இராஜகோபால் அவர்களும் இரண்டு கிழக்குப்

15

# இலங்கையில் தோற்றது ஐ.நா.





**சர்வதேசம் பல வறுமை நாடுகளிடம் தோற்றுள்ளது - சனாதிபதி**

**பான் கீ மூன் ஒப்புதல் வாக்குமூலம்**

இலங்கையின் இறுதிக்கட்ட போரில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்த ஐ.நா.வின் உள்ளகக் குழுவின் அறிக்கை, அந் நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளானது திட்டவட்டமான முறையில் தோல்வியடைந்து (Systematic Failure) விட்டது எனத் தெரிவிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் தனது



**2014 மார்ச் மாதத்திற்குள் நம்பத்தகு விசாரணை வேண்டும். இல்லையேல் சர்வதேச விசாரணை - நவிபிள்ளை**

அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தின் 68வது கூட்டத்தை

15

# வடக்கின் முதல்வருடன் தமிழ்நாட்டின் முதல்வர் பேசுவார்?

15


File photo

# கிழக்கின் சிரேட்ட காவல்துறை மா அதிபர் இடமாற்றம் ....... பின்னணியில் யார்?



கிழக்கு மாகாணத்திற்கான சிரேட்ட காவல்துறை மா அதிபராகப் பணியாற்றிய பூஜித ஜெயசுந்தர காவல்துறைத் தலைமைப் பணியகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்விடமாற்றத்தின் பின்னணியில் யார் உள்ளார்கள் என்ற விபரத்தை ஸ்ரீலங்கா மிரர் தளம் வெளியிட்டுள்ளது.

காத்தான்குடி காவல் நிலையத்தில் இரண்டாயிரம்

15

# மூதூரில் சூரன் மீன் விசமாகி ஆண் ஒருவர் பலி

**- 26 பேர் வைத்தியசாலையில் -**

(மதன் -அனுர- உதயா)

மூதூரில் சூரன் மீன் விசமானதால் அதனையுண்ட இருபத்தியேழு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று 25.09.2013ல் நடந்துள்ளது.

இவர்களுள் ஒருவர் நேற்று இரவு 1.30 மணிக்கு மூதூர் பொது வைத்தியசாலையில் சாவடைந்துள்ளார். அவரது சடலம் திருகோணமலைப் பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சாவடைந்தவர் ஜேகப்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU



159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042


## வணக்கம்

### வரலாற்றைக் காத்தல் !!!

கிழக்கு மாகாணம் எங்கும் சமயக் கருத்தரங்குகளை நடாத்துவதற்காக இந்துக் கலாசார அமைச்சுடன் தன்னார்வத் தொண்டராகப் பயணம் மேற்கொண்டிருந்த பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் கடந்த வாரம் திருகோணமலைக்கும் வந்திருந்தார்.

சமயக் கருத்தரங்குகளை மாணவருக்கு நடாத்திக் கொண்டு, தனக்குக் கிடைக்கும் எஞ்சிய நேரங்களில் கல்வெட்டுக்களைத் தேடி அவற்றை வாசித்து அறிவதற்காகத் தனது தள்ளாடும் வயதிலிலும் அப் பெரியோன் மேற்கொள்ளும் முயற்சி யாருக்காக??? எமது இனத்தின் வரலாற்றைக் கண்டு பிடித்து கலப்படமில்லாமல் எழுதி, இனி வரும் தலைமுறைகளுக்காகச் சேகரித்து வைப்பது அவர் எமது இனத்திற்காகச் செய்யும் தன்னலமற்ற தொண்டு அல்லவா??

பொதுவாகவே மக்கள் தமது வரலாற்றைக் கூறும் கல்வெட்டுக்களைக் கண்டு பிடித்தால் அவர்களின் பணி நிறைவடைகின்றது. அதைத் தொடர்ந்து அக் கல்வெட்டுக்களைப் பாதுகாத்து, வாசித்து, தகவல்களை வெளிப்படுத்தி அம் மக்களின் வரலாற்றை வரைந்து விடும் பணியை, அம்மக்களின் அரசு செய்து விடும். ஆனால் ஈழத்தமிழர்களின் வரலாற்றைக் கூறும் கல்வெட்டுக்களைத் தமிழ் மக்கள் கண்டு பிடிப்பதுடன் மட்டும் நின்று விடமுடியாது. அவற்றைப் பாதுகாத்து உரியவர்களிடம் சேர்ப்பித்து, சரியான முறையில் அவ் விடயத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவை அம் மக்களின் கைகளிலேயே பொதிந்து கிடக்கின்றது.

அதனை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

பேராசிரியர் முருகர் குணசிங்கம் புலம் பெயர் நாடுகளில் வெளியிட்ட வரலாற்றுப் புத்தகத்தில் (இலங்கையில் அப்புத்தகம் கிடைப்பது அரிது) வடக்கில் வாழ்ந்த மன்னர்கள் தமது வரலாற்றைப் பொறித்து வைப்பதில் எதிர் கொண்ட முக்கிய பாதகக் காரணியாக அவர்கள் கருங் கற்களையோ, பெருங் கற்களையோ தமது பணிகளிற் பயன் படுத்தாமல் முருகைக் கற்களைப் பயன்படுத்தியதால் அவை காலப் போக்கில் அழிவடைந்து விட்டன எனத் தெரிவித்துள்ளார். ஆனால் கிழக்கின் மன்னர்கள் கருங்கற்களில் தமது பணிகளைச் செதுக்கி எமக்காக விட்டுச் சென்றிருப்பது எமது வரலாற்றை அறிந்து கொள்வதற்காகவே...

நீங்கள் உங்களது இனத்திற்காக என்ன செய்யலாம் என்பதையிட்டு இன்னும் சிந்தித்துக் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

அதன்பால் காலம் உங்களுக்கான கதவொன்றைத் திறந்துள்ளது. நீங்கள் கடந்து போகும் கற்களில் எங்களின் வரலாறு பொதிந்து கிடக்கலாம். அவற்றை நீங்கள் கண்டுபிடித்தால் வரலாற்றில் உங்களின் பெயர் பொறிக்கப் பட்டுவிடும்... சாம்பல்தீவுப் பெரியவர் திரு.நா.தம்பிராசா அவர்களின் பெயரைப் போல............



## - மகனின் வெற்றியால் பதவியிழப்பாரா? பிரதமர்-

மத்திய மாகாணத்தில் அதி கூடிய விருப்பு வாக்குகளை பிரதம மந்திரி டி.எம். ஜெயரத்னவின் மகன் அனுராத ஜெயரத்ன பெற்றுள்ளார். அதனையடுத்து மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆனால் அண்மையில் சனாதிபதி எடுத்த ஒரு தீர்மானத்தால் அப் பதவியை அனுராத அனுபவிக்க முடியாமல் போய்விடும் போல் உள்ளது.

அம் முடிவு யாதெனில் அமைச்சரவை அந்தஸ்திலுள்ள அமைச்சர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு முதலமைச்சர் பதவியினை வழங்குவதில்லை என்பதாகும்.

அதனைத் தொடர்ந்து தனது மகனுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக பிரதமர் பதவி விலகுவார் என்றே உள்ளக வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

தனது உடல் நிலை, வயது மற்றும் தனது மகனின் எதிர்கால அரசியல் வாழ்வு போன்றவற்றைக் கருத்திற் கொண்டே பிரதமர் இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

தற்பொது அமெரிக்கப் பயணத்தில் இருக்கும் சனாதிபதி அதனை முடித்துக் கொண்டு நாட திரும்பிய பின்னர் தனது தீர்மானத்தை தெரிவிப்பார் என்றே அவ் உள்ளக வட்டாரங்கள் செய்தியைக் கசிய விட்டுள்ளன.

முதலமைச்சரைத் தீர்மானிப்பது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மத்திய குழு என்பதால் அம் முடிவிற்குத் தாம் முழுவதும் கட்டுப்படப் போவதாக அனுராத தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

எனினும் பிந்திக் கிடைத்த தகவல்களின் படி பஷில் ராசபக்ச அனுராதாவை அழைத்து அவரது முதலமைச்சர் பதவிக்காக பிரதமர் பதவி விலக வேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்திருப்பதாகவும் தெரிகின்றது.



## மாகாண சபை அமைச்சர் குற்றமற்றவர் - நீதிமன்றம்

கிழக்கு மாகாணசபையின் சுகாதார அமைச்சரான எம்.எம் மன்சூரின் மீது சுமத்தப்பட்டிருந்த கொலை முயற்சிக் குற்றச் சாட்டொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதவான் போதிய ஆதாரங்கள் இன்மை மற்றும் ஆதாரங்களின் எண்ணிக்கை போதுமாக இல்லை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அமைச்சரை விடுதலை செய்துள்ளார்.

## வங்கி முகாமையாளரின் ஈரூர்தி களவு

திருகோணமலை கஸ்கிசன் வீதியில் உள்ள வங்கி முகாமையளர் ஒருவரின் விடுடினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஸ்கூட்டி பெப்ட் ஈரூர்தி களவு போயுள்ளது.

24ம் திகதி இரவு வீட்டின் முன்புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவ் வண்டியைக் கள்வர்கள் படலையைப் பூட்டியிருந்த பீட்டையுடைத்துக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## சவூதி அமைச்சர் காத்தான்குடியில்

சவூதி அரேபியாவின் மத விவகார மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ்'செ'ய்க் அப்துல் கரீம் இப்றாகீம் இன்று வியாழக்கிழமை காத்தான்குடிக்கு வருகை செய்துள்ளார்.

இதன்போது காத்தான்குடியில் நிர்மாணிக்கப்படும் மன்னர் அப்துல்லாஹ் பல்கலைக்கழக இணைப்பு கல்லூரி மற்றும் இஸ்லாமிய நூதனசாலை ஆகியவற்றின் நிர்மாண வேலைகளை சவூதி அரேபிய அமைச்சர் பார்வையிட்டார்.

இவருடன் சவூதி அரேபியாவின் ஆசிய நாடுகளுக்கான பணிப்பாளர் நாயமும் விஜயம் செய்துள்ளார்.

## ஊர் பார்க்க வந்த முதலையை கட்டி வைத்த ஊர்மக்கள்



திருகோணமலை இலுப்பைக் குளம் பகுதியில் ஆட்டுப் பண்ணையை நோக்கி வந்த சுமார் எட்டு அடி நீளமான முதலையை ஊர் மக்கள் கட்டி வைத்துள்ளனர்.

நிலாவெளிக்குச் செல்லும் புல்மோட்டைப் பிரதான தெருவில் இலுப்பைக் குளம் எட்டாம் வட்டாரத்தில் கடந்த 24 ம் திகதி து.மதன்ராஜ் என்பவரின் ஆட்டுப் பண்ணையை நோக்கி பின்இரவு 8.30 மணிக்கு இம் முதலை வந்ததைக் கண்ட இவரது மகன் சுகிர்தன் தனது இரண்டு நண்பர்களான சசிதரன் மற்றும் பெல்சியன் ஆகியோரின் உதவியுடன் பிடித்துக் கட்டி வைத்துள்ளனர். பின்னர் மறுநாள் காலை காவல்துறைக்கு இவ்விடயத்தைத் தெரியப்படுத்தியு ள்ளனர். அன்பர் ஒருவர் விடயத்தை மலைமுரசிற்கு அறியத்தந்ததனைத் தொடர்ந்து, அப்பிரதேசத்தில் பணியிலிருந்த மலைமுரசின் அலுவலகச் செய்தியாளர்கள் முதலையைப் படம் பிடித்துள்ளனர். 25ம் திகதி மாலை 8 மணிக்கு வருகை தந்த வனத்துறையினரால் முதலை கொண்டு செல்லப்பட்டுள்ளது.





## கிழக்குக் கடலில் நிர்கதியானோரை மீட்டெடுத்தது கடற்படை

பௌல் முனையில் இருந்து சுமார் 47கடல் மைல் தொலைவில் மீன்பிடிப்படகு பழுதாகி நிர்கதியான ஐந்து மீனவர்களை கிழக்கு கடற்படை காப்பாற்றியுள்ளது. எந்திரக் கோளாறு காரணமைாக கடலில் தத்தளித்த றோலர் படகான உபுள எனப் பெயரிடப்பட்ட படகே காப்பாற்றப்பட்டது. மீன்பிடி கடல் வளத்துறை அமைச்சின் தகவலை அடுத்து நடவடிக்கையில் இறங்கிய கடற்படை தனது கலங்களில் ஒன்றான பி422ஐ அவ்வடத்திற்கு அனுப்பியது. பழுதான படகு கொடபே கடற்குடாவின் மீன்பிடி வளத்துறை அமைச்சிடம் கைிளக்கப்படது





மீட்கப்பட்ட றோலர் படகை பாதுகாத்து நிற்கும் கடற் படைப் படகான பி 245 ஐயும் மீட்கப்பட்ட மீனவர்களையும் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் கைவிடப்பட்ட நிலையில் வாக்களிக்கப்பட்ட சீட்டுக்கள்

புத்தளம் சென்.அன்றூஸ் மகா வித்தியாலய வகுப்பறையொன்றில் இருந்து வாக்களிக்கப்பட்ட வாக்குத் தாள்களின் பொதிகள் மூன்று கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வருவிக்கப்பட்ட காவல்துறை மற்றும் தேர்தல் திணைக்கள அலுவலர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தல்களில் வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் பொதிகளே இவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்களிக்கப் பட்டுள்ள இத்தாள்கள் எண்ணப்பட்டபின்னர் இருப்பகத்திற்கு எடுத்துச் செல்லப் படவில்லை என்றே தாம் நம்புவதாகத் தோதல் திணைக்கள் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் அவை எண்ணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை என்றே அங்கிருந்த மக்கள் நம்புவதாக தகவல் கசிந்துள்ளது.

இத் தகவலைக் கேள்வியுற்ற தேர்தல் ஆணையர் சம்பவ இடத்திற்கு அவசரமாக வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

விருப்பு வாக்குகளை மாற்றியமைக்கும் எண்ணத்துடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் எனவம் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரான கிங்ஸ்லி பெர்ணாண்டோ தான் எனவும் அசோக வடிகமங்காவ என்னும் ஐ.ம.சு.மு வின் உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## புல்மோட்டை வீதியில் திறந்து கிடக்கும் குழி

திருமலை – புல்மோட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள ஆத்திமோட்டை கிராமத்தின் 7ம் ஒழுங்கை பிரதான வீதியைச் சந்திக்கும் இடத்தில் அரச திணைக்களங்களினால் அமைக்கப்பட்ட குழி ஒன்று மூடப்படாது திறந்த நிலையில் மிக நீண்ட காலமாக காணப்படுகின்றது. இவ்விடம் மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும் பகுதியாக இருப்பதுடன், ஆத்திமோட்டை பாடசாலையில் கல்வி பயிலும் ஆரம்பக் கல்வி மாணவர்களும் இவ்வீதியினையே பயன்படுத்துகின்றனர். பாரிய அனர்த்தம் ஏற்பட முன் தொடர்புடைய திணைக்களம் இவ்விடயத்தில் கூடிய அக்கறை எடுத்து ஏற்ற நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ள வேண்டும்.

(திருமலைப்பிரியன்)

வாரம் ஒரு புகைப்படம்



நன்றி – டெய்லி மிரர்





## திருமலை மாவட்டச் சாரணர் ஒன்றுகூடல்

திருகோணமலை மாவட்ட சாரணர் ஒன்றுகூடல் புனித சூசையப்பர் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை 20.09.2013 ஆரம்பித்து வைக்கப்பட்டது. சாரணர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ஆ.ஜெகசோதி. நிவைவேற்றுக்குழுத் தலைவர் நாயகம் சிற்றம்பலம் ஆகியோர் ஒன்றுகூடலை ஆரம்பித்து வைத்தனர். மூன்று தினங்கள் இவ் ஒன்றுகூடல் நடைபெற்று முடிந்தது.

மாவட்டத்தில் உள்ள 8 பாடசாலைகளைச் சேரந்த 180 ஆண் பெண் சாரணர்கள் இவ் ஒன்றுகூடலில் கலந்து கொண்டனர். (கதிரவன்)



மாவட்டச் சாரணர் பொறுப்பாளர் திரு. பத்மசீலன் உரையாற்றுவதையும், பொறுப்பாசிரியர்கள் மற்றும் நடவடிக்கையில் பெண் சாரணர்களையும் காணலாம்





## இலஞ்சக் குற்றச்சாட்டில் கைது

பாதுகாப்புக் கம்பனி ஒன்றிடமிருந்து ரூபா 50,000 த்தை இலஞ்சமாகப் பெற முயன்ற குற்றச்சாட்டில் பொலனறுவை உதவித் தொழில் ஆணையாளரை இலஞ்ச ஊழல் தடுப்புப்பிரிவு கைது செய்துள்ளது. கைதான வரை நீதிமன்றில் முன்நிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## "நிர்வாணமும் பயமும்" நிகழ்ச்சிக்கு எதிராக மில்லியன் கணக்கானோர் திரள்வு



"டிஸ்கவரி" அலை வரிசையில் ஒலிபரப்பாகிவரும் "நிர்வாணமும், பயமும்" என்ற மெய்மைச் சம்பவ நிகழ்ச்சிக்கு மில்லியன் கணக்கான தாய்மார்கள் தமது எதிர்ப்பினைப் பதிவு செய்துள்ளனர். இம் மெய்மைச் சம்பவ (Reality show) நிகழ்ச்சியின் போது முன்பின் அறியாத ஆணும் பெண்ணும் இருபத்தியொரு நாட்கள் அடர்ந்த கானகத்தினுள் பத்துக் கிலோமீற்றர் தூரம் வரை நடைபயிழ வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபயிலும் போது அம் முன்பின் தெரியாத இருவரும் பொட்டுத் துணி கூட இல்லாமல் நிர்வாணமாகவே நடை பயிழ வேண்டும். இந்த மெய்மைச் சம்பவ நிகழ்ச்சியில் கானகத்தில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களுக்களைக் கருத்திற்கொண்டே பெருமளவு மக்கள் இந் நிகழ்ச்சியை எதிர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வன்புணர்வுக்கு உள்ளான குழந்தை முதல் பெண்மணிக்குக் கடிதம்-



இலங்கையின் முதல் பெண்மணியான ஷிராந்தி ராசபக்சவிற்கு பதினைந்தே வயதான பெண் குழந்தையொன்று கடிதமொன்றை அனுப்பியுள்ளது. இக்குழந்தை கத்தி முனையில் காமுகன் ஒருவனால் வன்புணர்வுக் குள்ளாக்கப்பட்ட குழந்தையாகும்.

பாடசாலைக்கு காலை வேளையில் நடந்து சென்ற போது காமுகன் ஒருவன் திடீரெனத் தோன்றி அவளைக் கொலை செய்து விடுவேன் எனப் பயமுறுத்தி கூரிய ஆயுதமொன்றின் முனையில் தனது வீட்டுக்கு இட்டுச் சென்று வன்புணர்ந்துள்ளான். பின்னர் அக் குழந்தையைப் பாடசாலையில் விட்டுச் சென்றுள்ளான்.

விடயம் காவல்துறைக்கு எட்டியதை அடுத்து கைதாகி விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டிருந்த அக் காமுகன் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளான். அதனைத் தொடர்ந்தே இக்குழந்தை முதற் பெண்மணிக்குக் கடிதமொன்றை வரைந்துள்ளது. அக்கடிதத்தில் தனது வாழ்டவை அழித்த இக்காமுகனுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

## - சனீஸ்வர விரதம் ஆரம்பம் -



கடந்த 21ம் திகதி முதல் சனீஸ்வர விரதம் ஆரம்பமானதைத் தொடர்ந்து கிழக்கிலங்கையில் உள்ள ஒரேயொரு சனீஸ்வரன் கோயிலான திருகோணமலை சனீஸ்வரன் கோயிலுக்கு விரதம் இருப்பவர்களும், எள்ளெண்ணை எரிப்பதற்காகப் பெருமளவு பக்தர்களும் புடைசூழ்ந்தனர். (கதிரவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்தப் படுதோல்வி ?.......??

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் படுதோல்வியைச் சந்தித்துள்ளது. 2005 இல் மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், தேர்தல் ரீதியாகவும், அரசியல் ரீதியாக சந்தித்துள்ள மிகப்பெரிய தோல்வி இது.

இப்படியொரு தோல்வி அரசாங்கத்துக்கு ஏற்படும் என்றோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தளவு பெரிய இமாலய வெற்றி கிடைக்கும் என்றோ எவரும் நினைத்திருக்கவில்லை.



காரணம், வடக்கில் அரசாங்கத்தின் அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களால், அரசியல் ரீதியாக மக்கள் கவரப்படக் கூடும் என்ற கருத்து பரவலாக இருந்து வந்ததால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தளவு பெரிய வெற்றியை எவராலும் கணிக்க முடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூட இதனை எதிர்பார்க்கவில்லை.

அவர்கள், 30 ஆசனங்களை வென்றால், தமது குரலை உலகம் காது கொடுத்துக் கேட்கும் என்று பிரசாரங்களை செய்திருந்தனரே தவிர, எவரும் 30 ஆசனங்களை வெல்வோம் என்று நம்பிக்கை தெரிவிக்கவில்லை.

தேர்தல் காலத்தில் தொடர்ச்சியாக இருந்து வந்த இராணுவத் தலையீடுகள், அச்சமான சூழல், அரசாங்கத்தின் பிரசாரங்கள், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் என்று பல்வேறு காரணங்களால், இந்தத் தேர்தலில் தாம் கடுமையான போட்டியை சந்திக்க நேரிடும் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் உறுதியாக நம்பினார்கள். அதனால், பிரசாரங்களில் கடுமையாக உழைக்க அவர்கள் தவறவில்லை.

கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்களில் மக்கள் அலை வீசியது என்று கூறமுடியாவிட்டாலும், கணிசமான வர்கள் கலந்து கொண்டனர். அதை வைத்துக் கூட வாக்களிப்பு எப்படியிருக்கும் என்று சரிவரக் கணிக்க முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்ற கருத்து பரவலாகவே இருந்தாலும், ஆளும்கட்சி கடும் போட்டியாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வாக்காளர்கள் மௌனமாக செய்த புரட்சி, கூட்டமைப்பை வெற்றியின் உச்சத்தில் கொண்டு போய் நிறுத்தியுள்ளது.

சில ஆங்கில ஊடகங்கள் இதனை ஒரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுனாமி என்று குறிப்பிட்டிருந்தன. தேர்தல்களில் சில கட்சிகளுக்கு ஆதரவாக அலை வீசுவதுண்டு. இது அதற்கும் அப்பால், பேரலையாக எழுந்ததால் தான், சுனாமி என்று குறிப்பிடப்பட்டது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில், இந்தளவுக்கு ஆசனங்களைப் பெறுவதும், வாக்குகளைக் கவர்வதும் அசாதாரணமான விடயங்கள்.

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் இது ஒரு முக்கியமான பதிவாக எப்போதும் பேசப்படும்.

இந்த வெற்றி எவ்வாறு சாத்தியமானது, கோடி கோடியாக கொட்டியும் ஏன் அரசாங்கம் தோற்றுப்போனது? இந்தக் கேள்விகளுக்கு இப்போதும் பலர் விடைதேடிக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்து, அரசாங்கம் பெரும் மனக்கோட்டை கட்டியிருந்தது என்பதே உண்மை. அதனால் தான், அங்கு தனக்கான ஒரு வலுவான தளம் கட்டியெழுப்பப்படும் வரைக்கும் காத்திருந்தது.

போர் முடிந்து நான்கு ஆண்டுகளான பின்னரும், வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்ததற்கு அதுவே காரணம்.

அபிவிருத்தித் திட்டங்களின் மூலமும், வேலைவாய்ப்புகள், சலுகைகள் மூலமும், அரசாங்கம் தனக்கானதொரு தளத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டு தான், இந்தத் தேர்தலில் மல்லுக்கட்டியது.

அதனால் தான், தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர், கிளிநொச்சிக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, வடக்கிலுள்ள மக்களின் மனநிலையை தாம் சரியாக அறிந்து வைத்துள்ளதாகவும், குமார் பொன்னம்பலத்தை தோற்கடித்து விட்டு, ஹெக்டர் கொப்பேகடுவவை வெற்றிபெற வைத்தவர்கள் அவர்கள் என்று தப்பும் தவறுமான உதாரணத்தை காட்டியிருந்தார்.

தேர்தலுக்கு சில நாட்கள் முன்னதாக, ஊடக ஆசிரியர்களை சந்தித்த போது, வடக்கு மாகாணத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என்று தனக்குத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். வடக்கில் நடந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிரசாரக் கூட்டங்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்த மக்களைப் பார்த்து, அவர் மட்டுமல்ல, அரசதரப்பிலுள்ள எல்லோருமே புல்லரித்துப் போயினர்.

அதனால் தான், வடக்கில், தமக்குச் சாதகமான அலையே வீசுவதாக அரசதரப்பு அமைச்சர்கள் பலரும், கொழும்பில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி கூறிக் கொண்டிருந்தனர்.

ஆனால், அபிவிருத்தித் திட்டங்களும், அரசாங்கத்தின் கூட்டங்களில் கூடும் கூட்டமும், வாக்காளர்களின் முடிவுகளைத் தீர்மானிக்காது என்ற உண்மை, தேர்தலின் பின்னர் தான் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கைப் பற்றிய, தமிழ் மக்களைப் பற்றிய அரசாங்கத்தின் எல்லாக் கணிப்புகளுமே தவறாகத் தான் முடிந்துள்ளது என்பது முக்கியமானது.



போர் முடிவுக்கு வந்த பின்னர், பிரபாகரனுடன் அவரது ஈழக்கனவும் செத்துப் போய் விட்டதாக மார்தட்டிக் கொண்டதும் இதே அரசாங்கம் தான். பின்னர், சில மாதங்களிலேயே, இன்னமும் நாட்டைப் பிரிக்க பலர் சதி செய்கிறார்கள் என்றும், ஈழக் கோரிக்கை சாகவில்லை என்றும் சான்றிதழ் கொடுத்ததும் இதே அரசாங்கம் தான்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஸ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்த போது நாட்டைப் பிரிக்க சதி செய்வதாக ஓலமிட்டதும் இதே அரசாங்கம் தான்.

போரை, போருக்கான அடிப்படைகளை, போருக்கு வலுச்சேர்த்த காரணங்களை அரசாங்கம் சரியாக கணித்திருந்தால், இவ்வாறெல்லாம் நடந்து கொண்டிருக்காது.

முப்பதாண்டு காலப் போரின் எல்லாக் காயங்களுமே, அபிவிருத்தி மாயைக்குள் அடக்கமாகி விடும் என்று போட்டதே முதலாவது தப்புக்கணக்கு.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன, அவர்களின் விருப்பங்கள் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முனையாமல், தான் வரைந்து வைத்த ஒரு வட்டத்துக்குள் அவர்களை இழுத்து வரலாம் என்று கருதியது அடுத்த தவறு.

இப்படியே பல தப்புக்கணக்குகளைப் போட்டுக் கொண்ட அரசாங்கம், வடக்கிலுள்ள தமிழர்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டு, தம்மையே ஆதரிப்பார்கள் என்று கருதியது தான் உச்சக்கட்ட தவறு.

அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, சலுகைகள் என்று எல்லாவற்றுக்கும் அப்பாலும், வடக்கிலுள்ள தமிழர்கள் தமக்கு அபிலாசைகள் உள்ளன என்பதை வெளிப்படுத்தக் காத்திருந்தார்கள். அதற்கான வாய்ப்பாக மாகாணசபைத் தேர்தலை அவர்கள் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டனர்.

அரசதரப்பில் போட்டியிட்ட கட்சிகள், வேட்பாளர்கள்' பலரால், இப்படியொரு தோல்வியை நம்பவே முடியவில்லை. ஏனென்றால், அவர்களின் எதிர்பார்ப்பு மிகையானதாக இருந்தது.

நியாயமான தேர்தலை நடத்துவதாக உலகத்துக்கு வாக்குறுதி கொடுத்திருந்த அரசாங்கத்தினால், சர்வதேச கண்காணிப்பாளர்களின் கவனம் வடக்கின் மீது குவிந்திருந்த நிலையில், இது மோசடியான தேர்தல் என்று கூறமுடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட இறுதிநேர முயற்சிகள் பல, அருவருக்கத்தக்கவையாகவும், மலினத்தனமானவையாகவும் இருந்தன.

ஆனால், அவையெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு இன்னும் வலுச்சேர்க்க உதவியிருப்பதாகவே தெரிகிறது. இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இமாலய வெற்றிக்கு, அரசாங்கமே பல வழிகளில் துணைபோயுள்ளது.

ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, தமிழர் பிரச்சினைக்கு இது தான் தீர்வு என்றோ, பிரச்சினை குறித்து தமிழர்களின் பிரதிநிதிகளுடன் பேசுவோம் என்றோ அரசாங்கம் வாக்குறுதியை கொடுக்கவில்லை. அரசாங்கம் பேசியதெல்லாமே அபிவிருத்தி, நிதியுதவி பற்றித் தான். ஆனால் தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதையே எதிர்பார்த்தனர். அதனால் தான், உரிமைகள் தொடர்பாக எந்த வாக்குறுதியையும் வழக்கத் தயாராக இல்லாத அரசாங்கத்தை அவர்கள் ஆதரிக்க மறுத்துள்ளனர்.



இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் அறிக்கைக்கு கிடைத்துள்ள அங்கீகாரம், அரசாங்கத்துக்கு இன்னமும் நெருக்கடியை ஏற்படுத்தப் போகிறது. ஏனென்றால், அதனை தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையாக உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

தமிழ்மக்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக அரசாங்கம் மீளச் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இது ஒரு முக்கியமானதும் யதார்த்தமானதுமான கருத்து.

தமிழர் பிரச்சினை தொடர்பான கொள்கைகளை அரசாங்கம் மாற்றிக் கொள்ள வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளது என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. அரசாங்கம் சாதகமான மாற்றத்துக்குத் தயாராக இருக்குமேயானால், அதுவே நிலையான அமைதிக்கான அடிப்படையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**கே.சஞ்சயன்**

(நன்றி. தமிழ்மிரர்)

வடக்கில் நடந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பிரசாரக் கூட்டங்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்த மக்களைப் பார்த்து, அவர் மட்டுமல்ல, அரசதரப்பிலுள்ள எல்லோருமே புல்லரித்துப் போயினர்.

அவர்கள், 30 ஆசனங்களை வென்றால், தமது குரலை உலகம் காது கொடுத்துக் கேட்கும் என்று பிரசாரங்களை செய்திருந்தனரே தவிர, எவரும் 30 ஆசனங்களை வெல்வோம் என்று நம்பிக்கை தெரிவிக்கவில்லை.

ஆனால் தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப் படுவதையே எதிர்பார்த்தனர். அதனால் தான், உரிமைகள் தொடர்பாக எந்த வாக்குறுதியையும் வழக்கத் தயாராக இல்லாத அரசாங்கத்தை அவர்கள் ஆதரிக்க மறுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டாளைச்சேனை அந் – நூர் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் புணரமைப்பு!

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் நிதியொதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்பட்டுவருகின்றது. கோணாவத்தை பிரதேச விளையாட்டு வீரர்களினதும் மைதானமாக விளங்கும் இம்மைதானம் புணரமைக்கப்படுவதன் மூலம் இப்பிரதேச விளையாட்டுத்துறை பாரிய முன்னேற்றம் அடையும் என நம்பப்படுகின்றது.

பாடசாலை மைதானத்தை புணரமைக்க நடவடிக்கை எடுத்து நிதி ஒதுக்கிய பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவிற்கு இப்பிரதேச விளையாட்டுக் கழகங்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.





(ஒலுவில்செய்தியாளர்:எம்.எல்.எம்.பாரீஸ்)

## மது ஒழியட்டும் சிறுவர் வாழ்வு மலரட்டும் எனும் தொனிப்பொருளில் சர்வதேச சிறுவர் தின விழா இம்முறை சம்மாந்துறையில்.

மது ஒழியட்டும் சிறுவர் வாழ்வு மலரட்டும் எனும் தொனிப்பொருளில் சர்வதேச சிறுவர் தின விழா இம்முறை சம்மாந்துறையில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறுவர் தின விழா சர்வதேச சிறுவர் தினமாகிய எதிர்வரும் ஒக்டோபர் 01ஆம் திகதி




சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் எம். முபாரக் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார, சுதேச, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் எம்.ஐ.எம் மன்சூர் பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.எஸ் உதுமாலெவ்வை, விமலவீர திசாநாயக்க, ஹாபீஸ் நஸீர் அஹமட் மற்றும் அம்பாறை மாவட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும், திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அட்டாளைச்சேனை பர்காத்)

## கூட்டுப் பசளை தயாரிக்கும் பயிற்சி நிகழ்வு

விவசாயத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுப்பசளை தயாரித்தல் மற்றும் அதற்கான மூலப் பொருட்களை வழங்கி வைக்கும் நிகழ்வு ஆலிம்நகர் விவசாய விரிவாக்க காரியாலய பொறுப்பதிகாரி ஏ.ஜீ.பிர்னாஸ் தலைமையில் அண்மையில் அக்கரைப்பற்று ஹில்ருநகரில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விவசாய மூலப் பொருட்கள் வழங்கி வைத்தார்.

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் ,ஸ்மாயில்)

## எத்தனை காலம் தான்......?

"திரைகடலோடு திரவியம் தேடு" என்ற முதுமொழியை நாம் நன்கு அறிந்திருக்கின்றோம். ஆனால் கடல்வழியாக வெளிநாடுகளுக்கு பணம் சம்பாதிக்க சென்றவர்களின் பரிதாப நிலையையும் அறிந்திருக்கிறோம். இந்த உலகிற்கே ஓர் எடுத்துக்காட்டு திருட்டுத்தனமான அவுஸ்ரேலியா கடல்பயணம், ஆயிரத்திற்கு மேலானோர் ஆழ்கடலின் அகோரப்பிடிக்குள் அகப்பட்டு அப்பயணத்தினால் அகாலமரணம் அடைந்துள்ளனர்.

அங்கு செல்வதற்கு நல்ல வழியிருக்க கள்ளவழியால் சென்ற பல படகுகள் பயணிகளுடன் காணாமல் போயுள்ளன. தற்பொழுது இத்திருட்டுப் பயணத்தின் பல சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு வருகின்றனர் அப்பாவி பொதுமக்களை ஏமாற்றி கோடி, கோடியாக சம்பாதித்த பல கோடீஸ்வர முகவர்களும் இப்பொழுது சட்டத்தின் முன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

மாதா மாதம் மத்தியதரை நாடுகளில் பணிப்பெண்களுக்கு ஏற்பட்டுவரும் மிருகத்தனமான நடவடிக்கைகளின் சோகக்கதைகளை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தினாலும் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையில் என்றுமே சரிவு ஏற்படுவதே இல்லை இதற்கு முக்கிய காரணம் எமது பொருளாதார சூழ்நிலையே. வறுமையிலிருந்து விடுபட்டு வசதியாக வாழவேண்டுமென வரம்பு மீறி சிந்திப்பதும் பல காரணிகள் மத்தியில் அதுவும் ஒன்று.

இருந்தாலும் என்ன செய்வது? பல கனவுகளை நனவாக்கிக் கொள்ள எதற்கும் முகம்கொடுக்கத் தயார் என்று சிந்திப்பவர்களிடையில் நிலாவெளியை சார்ந்த ஏழை இளம் விவசாயியும் ஒருவர். புகையிலைத் தோட்டத்தில் கூலி வேலை செய்து சம்பாதிக்கும் பணம் தனது குடும்ப செலவுக்கு போதுமானதாக இருக்காத காரணத்தினால் சவூதி செல்ல ஆயத்தமானார் அந்த ஏழை விவசாயி.

ஒரு பெண் குழந்தைக்கு தந்தையான அவருக்கும் பல கனவுகள் இருந்தன. பிள்ளையை நன்றாக படிபிக்க வேண்டும். வசதியான இடத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும். அழகான வீடுகட்ட வேண்டும். அன்னும் எத்தனையோ ஆசைகள் அவர் மனதில் இருந்து நிரம்பி வழிந்தன. அதனால் மனைவியையும், அந்தப்பெண் குழந்தையையும், விட்டு அவர் சவூதிக்கு விமானம் ஏறினார். உறவு முறை அல்லாத பக்கத்து வீட்டு மாமா குடும்பத்தை நம்பியே அவர்களைத் தனியே விட்டு சென்றிருந்தார். அவரது முதலாவது கனவு எப்படியும் தனக்கு தன் பெற்றோர்கள் தந்த காணியில் அழகான வீடொன்றை கட்டுவதே.

மேலும் ஓரிரு வருடங்களில் அந்தக் கனவும் அவர் நினைத்த படி நனவானது. அதற்கு காரணம் சவூதியில் அவருக்க நிறைய சம்பாதிக்கக் கூடிய ஒரு பெரிய கம்பனியில் வேலை கிடைத்ததே. எல்லோருக்கும் எல்லாம் அமையாது என்பார்கள். சிலர் கனவு காண்பார்கள் ஆனால் அது நிறைவேறும் முன் அவர்களின் இறுதி கிரியைகள் நிறைவேறிவிடும்.

மிக குறுகிய காலத்தினுள் அந்த இளம் விவசாயி தனது எதிர்பார்ப்புக்கள் அத்தனையையும் கடவுளின் கிருபையினால் பூர்த்தி செய்து கொண்டார். கை நிறைய பணம் சம்பாதிப்பது தத்தமது மனைவி பிள்ளைகள், குடும்பத்தினருடன் சந்தோசமாக இருப்பதற்கே. பணத்தை மாத்திரம் அனுப்பிவிட்டு தனியாக கடல் கடந்து வாழ்வதில் என்ன பயன்? ஒரே வீட்டில் தத்தமது குடும்பத்தினருடன் சந்தோசமாக வாழ்வதையே எவரும் விரும்புவார்கள். அதையே அவரும் விரும்பினார். தனது நிலைப்பாட்டை தனது மனைவி மகள் ஆகியோருடன் தொலைபேசி ஊடாக பேசும் போது அடிக்கடி கூறிவந்தார். எப்படியும் இன்னும் ஓரிரு வருடங்களிற்குள் சொந்த நாட்டுக்குத் திரும்புவதே அவரின் நோக்கமாக இருந்தது.

தற்பொழுது அவரின் மகளின் பாடசாலை கல்வியும் முற்றாக முடிவடைந்து விட்டது. நல்ல இடமாக பார்த்து அவளுக்கு ஒரு துணையை தேடிக்கொடுப்பதை விட அவருக்கு வேறு என்ன வேலை? இனி அவர் யாருக்காக சொத்து சேர்க்க வேண்டும்? தேவைப்பட்டதெல்லாம் குடும்பத்திற்கு ஆசை தீர வேண்டிக்கொடுத்து விட்டார். நிம்மதியாக வாழ்ந்து, கையில் இருக்கும் பணத்தை வைத்து சொந்த ஊரிலே தனது கடைசிக் காலத்தை போக்குவதே அவரின் எதிர்காலத்திட்டமாக இருந்தது.

கையடக்கத்தொலைபேசி மூலமே தனது மகள் மனைவியுடன் சுமார் பன்னிரெண்டு வருடங்கள் தொடர்புகளை வைத்திருந்தார். ஓரிரு வருடங்கள் மாத்திரமே நேரிலே ஊருக்கு வந்து அவர்களை பார்த்துவிட்டு சென்றுள்ளார். அவருக்கு கூடப்பிறந்தவர்கள் என்று கூறுவதற்கும், மனைவியின் வழியில் உறவினர்களும், மிக நெருக்கமானவர்கள் என்று

## ...நாட்டு நடப்பு...

கூறுவதற்கும் அனேகமாக எவரும் அங்கு இல்லை.

உறவு முறை இல்லாத பக்கத்து வீட்டு மாமா குடும்பத்தினரகள் தன் குடும்பத்தை கவனித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலே அவர் சவீதி சென்றிருந்தார். மேலும் அவர் வெளியில் இருந்த காலத்தில் அவரின் மகளுக்கோ, மனைவிக்கோ, ஏதும் பிரச்சனைகள் அல்லது வருத்தங்கள் என்று கூட அவர் கேள்விப்பட்டதே இல்லை .

வீட்டில் மகளும்,மனைவியும் மிகவும் சந்தோசமாக இருக்கிறார்கள் என்பதை அவர்களின் தொடர்பாடலில் இருந்து அவருக்கு தெரிய வந்தது. இவர்களும் தங்களுக்கு பிரச்சனை அல்லது வேறு எதுவும் கஷ்ரங்கள், தொந்தரவுகள் என்று கூட அவருக்கு என்றுமே தெரிவித்ததில்லை. அந்த ரீதியில் அவர்கள் எப்பொழுதும் மிக சந்தோசமாகவே இருக்கிறார்கள் என்பதை தெளிவாக தெரிந்து, அவர்களுக்கு என்னென்ன தேவை என்பதை அறிந்து இலங்கைக்கு வரும் நண்பர்கள் மூலம் அவற்றை அனுப்பி வைப்பார். ஒரு நாள் அவர்களுக்கு ஒரு திடீர் அதிர்ச்சியை கொடுக்க வேண்டுமென்பதற்காக முன் கூட்டியே அறிவிக்காமல் நாடு திரும்பி அவரின் வீடுக்குச் சென்றிருந்தார். ஆனால் வீடு பூட்டி இருந்தது. அவர் திகைத்துப் போய், பக்கத்து வீட்டு மாமாவை தேடிப்போனார். மாமா வீட்டுத் திறப்பை அவர்கையில் கொடுத்து, அவர் இல்லாத காலத்தில் அங்கு நடந்தவைகளை வரிவரியாக எடுத்துக் கூறினார். மாமா படித்தவர், அத்துடன் மிகவும் பண்பானவர். அவரின் பேச்சை நம்பித்தான் ஆக வேண்டும். மாமா கூறியவை சரியா? பிழையா? அல்லது உண்மைக்கு பிறம்பானவைகளா? என்று கூட பார்க்காமல் நேரடியாக நிலாவெளி கிறிஸ்தவ பாதிரியாரிடம் சென்று நடந்தவைகள் அத்தனையையும் அவரிடம் எடுத்துக் கூறினார். ஆனால் அவர் கூறமுன் பாதிரியாருக்கு முழு குடும்ப விடயமும் ஏற்கனவே தெரிந்திருந்தது.

அதனால் மேற்கொண்டு யாரிடமும் தனது குடும்பத்தினரின் பிரச்சினை தொடர்பாக அறிந்து கொள்ள அவர் விரும்பாது, போர் காலத்தில் பெற்றோரை இழந்த அனாதைச் சிறுவர்களுக்காக அந்தப் பாதிரியார் நடாத்தி வந்த அனாதை இல்லத்திற்கு தனது வீடு வாசல், பொருள், பண்டங்கள் அனைத்தையும் கையளித்து விட்டு மீண்டும் சவூதிக்கு விமானம் ஏறினார். அந்த அப்பாவி மனிதர்.

அவரின் மகள் மிக அழகானவள், மனைவி அதைவிட அழகானவர் அவர்களை கட்டுப்படுத்த அங்கு ஒருவரும் இருக்க வில்லை. அதனால் அவர்கள் யாருக்கும் பயப்பட அவசியம் ஏற்படவில்லை. மகள் பாடசாலைக் காலத்தில் விரும்பிய ஒருவரை திருட்டுத் திருமணம் செய்து கொண்டாள். அவரின் மனைவிக்கு ஊரில் ஏற்கனவே மீன் வாடி முதலாளி ஒருவருடன் கள்ளத்தொடர்பு இருந்து வந்தது. இப்பொழுது அவர் முதலாளியின் வீட்டுக்கு எஜமானியாகி விட்டார். தாயும் மகளும் சந்தர்ப்பத்தை பிரயோசனப்படுத்தி விட்டார்கள், இதைத்தான் பக்கத்து வீட்டு மாமா வரிவரியா அவரிடம் கூறியது.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# கசங்கிய மலரொன்றின் கண்ணீர்க் கதை

ஹஜ் புனித யாத்திரையை முடித்துக்கொண்டு நானும் எனது கணவரும் தாயகம் திரும்புகின்ற வேளையில் ஜித்தா விமான



நிலையத்தில் 5 மணித்தியாலங்கள் தாமதிக்க வேண்டி ஏற்பட்டது.

எங்களோடு ஓர் பெண்ணும் வந்திருந்தாள். நீண்ட நேரமாக அந்தப் பெண் அழுது கொண்டே இருந்தாள். அவளின் அழுகை என்னை உருக வைத்தது. அவளின் அழுகைக்கான காரணத்தை வினவினேன். அவள் ஓர் நடுத்தர வயதுப் பெண். அழுதழுது அவள் கண்கள் சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. மிகவும் பரிதாபமாக இருந்தாள். " எதையும் சொல்ல விரும்பா விட்டால் விட்டுவிடுங்கள் அல்லாஹ்விடம் தூஆ செய்யுங்கள் எல்லாம் நன்மையாக அமையும். எதற்கும் கவலைப்படாதீர்கள் என்று அவளுக்கு ஆறுதல் சொன்னேன். அவள் அழுது கொண்டே தன் கதையைக் கூறினாள்.

நான் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது கணவர் அன்றாடக் கூலிவேலை செய்பவர். சில நாட்களில் வேலை இருக்காது அப்போதும் எந்த பிரச்சனையும் இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்தோம். நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்கள் வளர்ந்து வரும் போது அவர்களுடைய எதிர்காலம் பற்றி அடிக்கடி சிந்தித்து கவலைப்படுவேன். என் கணவருக்கும் நல்ல தொழில் அமைந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையுமே என நான் நினைத்தேன்.

வெளிநாடு செல்வது ஒன்றுதான் இதற்கு வழி என்று தோன்றியது. எனது கணவரிடம் இதனைக் கூறியதும் உடனே அவர் மறுத்து விட்டார். நான்தான் கேட்கவில்லை.

" எத்தனையோ பெண்கள் வெளிநாடு போகிறார்கள் நான் போனால் என்ன குறைந்தா போகும்? எத்தனை குடும்பங்கள் இன்று முன்னேற்றமடைந்து இருக்கின்றன. எத்தனையோ பேர்



வீடுகள் கட்டுகிறார்கள். நாம் மட்டும் எப்போதும் ஒன்றுபோல் வாழமுடியுமா? நாமும் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைத்துக்கொள்ள வேண்டும். உங்களுடைய கூலியை மட்டும் நம்பியிருந்தால் இவற்றை எல்லாம் செய்ய முடியாது." என்று பலவாறு கூறி, அவர் முழு மனதுடன் சம்மதிக்காமலேயே என் விருப்பப்படி நான் வெளிநாடு வந்து விட்டேன்.

எனக்கு நல்ல இடம் கிடைத்து விட்டது என்று முதலில் சந்தோசப்பட்டேன். அப்படியே என் கணவருக்கும், குடும்பத்தவர்களுக்கும் தெரிவித்துவிட்டேன். ஆனால் என் சந்தோசம் நிலைக்கவில்லை. சில மாதங்களிலேயே எனக்கு சோதனை தொடங்கி விட்டது.

அந்த வீட்டில் இருக்கும் வயோதிபக் கணவருக்கும் வயோதிப மனைவிக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் இது நான் வந்த நாளில் இருந்து காணும் காட்சி. அந்த மனைவி தன் கணவரை கோபம் காரணமாக நெருங்க விடமாட்டாள். ஒரு நாள் அந்தக் கிழவர் எனது அறைக்குள் நுழைந்து விட்டார். நான் அதிர்ந்து விட்டேன் பயப்பட வேண்டாம் என்றார். அப்போதும் என்னால் தைரியம் அடைய முடியவில்லை. அவர் ஏதேதோ சொல்கிறார். அவரின் பாஷை முழுமையாக புரியா விட்டாலும் அவரின் மனைவி புரியும் கொடுமைகள் பற்றித்தான் சொல்கிறார் என்று புரிந்தது. அவர்மேல் பரிதாபம் ஏற்பட்டது. ஆனால் அந்த பரிதாபத்தை தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முற்பட்ட போது நான் நடுங்கிப் போனேன். கெஞ்சிக் கெஞ்சியே அவர் என்னை அணுகினார். நான் கூச்சலிட முற்பட்ட போது என் வாயை



பொத்திக்கொண்டு " சத்தம் போடாதே என் மனைவி உன்னை கொன்று விடுவாள். இந்த நாட்டில் எங்களை மீறி உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது" என்றார்.

"என்னை விட்டு விடு..... அல்லது இலங்கைக்கு அனுப்பி வைத்து விடு........ என்னை ஒன்றும் செய்து விடாதே" என்று கெஞ்சினேன். அவன் காலில் விழுந்து கதறி அழுதேன். ஆனாலும் அவன் என்மீது கொஞ்சம் கூட அனுதாபம் காட்டவில்லை. ஒரு நிமிடம் கூட இனிமேல் உயிர்வாழக் கூடாது என்று தோன்றியது. ஆனால் உயிரைக் கூட விட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை அந்த மிருகம் தன் தாகத்தை தணித்துக் கொண்டு போய்விட்டது.

அதன் பின் நான் உறங்கவில்லை. தலையணையில் முகம் புதைத்து கதறி அழுதேன். என் குழந்தைக்ள பற்றி நினைவு வந்தது என் கணவர் பற்றி.. அவர் கூறிய வார்த்தைகள் பற்றி நினைவு வந்தது அவரை நினைத்து அவரின் அன்பை நினைத்து அழுதேன். என்னை விட துர்ப்பாக்கி சாலி வேறு யாராக இருக்க முடியும்? நான் பாவி நான் மிகப்பெரும் பாவி... என்னைப் போல் யாரும் பாவியாகக் கூடாது. இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் பிறந்த மண்ணில் பிச்சை எடுத்து வாழ்ந்தாலும் வெளிநாடு பற்றி நினைத்துக் கூடப்பார்த்திருக்க மாட்டேன். இனி நான் என்ன செய்வேன்? எப்படி என் கணவர் முகத்தில் விழிப்பேன்? என்னால் எதையுமே நினைத்துப் பார்க்க முடியவில்லை. குப்பையாக வீழ்ந்து கிடந்தேன்.

கிழவி வந்து கதவைத் திறந்த போதுதான் பொழுது விடிந்து விட்டது. என்று தெரிந்தது. எழுந்திருக்க முயன்றேன் என்னால் முடியவில்லை உடம்பெல்லாம் அனலாகக் கொதித்தது. அழுதழுது முகமும் கண்களும் வீங்கி போய் இருந்ததால் கிழவி எனக்கு சுகமில்லை என நினைத்து வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்று மருந்து வாங்கித்தந்தாள். அவளிடம் நடந்ததைச் சொல்ல நினைத்தேன். கிழவன் கூறியது நினைவுக்கு வந்தது.என்னை அவள் கொன்று போட்டாலும் பரவாயில்லை. ஆனால் எதையாவது பொய் சொல்லி பொலிஸில் பாரம் கொடுத்தார்களானால், எனக்கு மாத்திரமன்றி என் கணவர் குடும்பத்தவர்களுக்கு பகிரங்கமாக ஏற்படப்போகும் அவமானத்தையும் அதனால் ஏற்படுகின்ற விபரீதங்களையும் நினைத்துப் பார்த்த போது என் ஜீவனே இறந்து விட்டது போன்றிருந்தது.

ஜீரணிக்க முடியாத இந்தக் கசப்பான துன்பத்தை எனக்குள்ளேயே அடங்கிக் கொண்டு எப்படியாவது இலங்கை போய் சேர்ந்து விட வேண்டுமென முடிவு செய்தேன். நான் அழுதழுதே இருந்ததால் கிழவி காரணம் கேட்டாள் " என் குழந்தைகளின் நினைவு என்னை வாட்டுகிறது. நான் சிலோன் போக வேண்டும் " என்றேன். அவளுக்கு கோபம் வந்து விட்டது. " உன்னை பெரிய விலை கொடுத்து வாங்கியிருக்கிறேன், நீ நினைத்தபடி என்னால் ஆட முடியாது. இரண்டு வருடம் கழித்துத் தான் நீ போக வேண்டும்" என்றாள்.

என்னால் மனம் ஒன்றி வேலை செய்ய முடியாமல் இருந்தது. என் உள்ளம் வேதனையால் துவண்டு போயிருந்தது. என் வேலைகளில் குறைகள் ஏற்பட்டதால் கிழவி என்னை அடித்து கொடுமை செய்ய ஆரம்பித்தாள். என் காலம் கண்ணீரிலேயே கரைய ஆரம்பித்தது. வெளிநாடு போவது எளிது. ஆனால் நாம் நினைத்த படி திரும்பி வர முடியாது என்பதைப் புரிந்து கொண்ட போது காலதாமதமாகி விட்டது. என்ன செய்வது, ஏது செய்வது ஒன்றுமே புரியவில்லை.

அந்த மிருகம் மீண்டும் என்னிடம் வருமென நான் எதிர்பார்க்க வில்லை ஆனால் வந்தது. நான் எவ்வளவோ கெஞ்கி அழுதேன் "நான் வேறு ஒருவரின் மனைவி எனக்கு குழந்தைகள் இருக்கிறார்கள் நான் கஸ்டத்தினால் தொழில் செய்ய வந்தேன். என்னை இப்படி கொடுமை செய்யாதே என்னை சிலோனுக்கே அனுப்பி வைத்து விடு "என்று தெரிந்த வார்த்தைகளைக் கூறி அவன் காலில் வீழ்ந்து அழுதேன். "சரி சரி நானே உன்னை சிலோனுக்கு அனுப்பி வைக்கிறேன். முரண்டு பிடிக்காமல் நான் சொல்வதைக் கேள்" என்றான்.

"முடியாது... முடியாது என்று வீறிட்டு அழுதேன். உயிருள்ள ஓர் இரும்பு உருவத்தோடு போராடி ஜெயிக்க எனக்கு சக்தியில்லை இப்படி அடிக்கடி வந்து என்னை துன்புறுத்தினான். நான் ஒவ்வொரு நாளும் செத்துப், பிழைத்துக் கொண்டிருந்தேன். நான் தற்கொலை செய்து கொள்ள முயன்றேன். என்னால் முடியவில்லை பல முறை அவனைக் கொலை செய்துவிட முயன்றேன். அதுவும் முடியவில்லை என் தாய்மண்ணின் சுதந்திரமும் அருமையும் அப்போதுதான் எனக்கு புரிந்தது இரவில் அவன் கொடுமை, பகலில் அந்த கிழவியின் கொடுமை.

நான் சரியாக வேலை செய்யவில்லை என கிழவி இராட்ஷசியாக மாறிவிட்டாள். நான் நெருப்பில் விழுந்த புழுவாகத் துடித்தேன். எனக்கென அங்கு யாரும் இல்லை என் மீது பரிதாபப்படவும் எனக்கு உதவி செய்யவும் யாருமில்லை ஒரு சிறைக்கைதியாக அனுபவித்த துன்பங்கள் அந்த இறைவன் ஒருவனுக்கு மட்டும்தான் தெரியும் நான் தொழுது, அழுது அல்லாஹ்விடம் மன்றாடி நின்றேன்.

இறைவா என்னை மன்னித்து விடு என் கணவரின் வார்த்தைகளை மீறி நான் நாடு கடந்து இந்த மண்ணுக்கு வந்தது நான் செய்த மிகப் பெரிய பாவம் அந்த பாவத்திற்காக யாரிடமும் வாய்திறந்து சொல்ல முடியாத மிக பெரிய தண்டனையை நீ எனக்கு தந்து விட்டாய். இதைவிட பெரிய தண்டனையை தாங்கும் சக்தி என்னிடம் இல்லை என்னை மன்னித்து இதிலிருந்து எனக்கு விடுதலையைத் தந்து விடு யா அல்லாஹ்" என தினம் அல்லாஹ்விடம் கூறி அழுதேன்.

ஒரு நாள் அந்த மிருகம் எனது அறையை விட்டு வெளியேறுவதையும் நான் அழுவதையும் அவளின் இளம்



வயது மகள் கண்டு விட்டாள். உடனே அவள் கிழவியிடம் சொல்ல அது ஒரு பயங்கர நாளாக எனக்கு மாறிவிட்டது. ஆவேசம் கொண்ட இராட்ஷசியாக கிழவி மாறிவிட்டாள். என்னை இழுத்தெடுத்து தாறுமாறாக தாக்கினாள். நான் உயிர் பிழைப்பேன் என நினைத்துக் கூட பார்க்கவில்லை. என் அன்புக் கணவரையும், அருமையான பிள்ளைகளையும், குடும்பத்தவர்களையும் கடைசியாகக் கூட பார்க்க முடியாமல் இறக்கப் போகிறேனே என நினைத்து அழுதேன்.

அந்தக் கிழவி பொலிஸ"க்கு அறியப்படுத்தினாள். நான் எதற்குப் பயந்தேனோ அதுதான் நடக்கப்போகிறது என நினைத்து மேலும் பயந்தேன். கிழவி படுத்திய பாட்டில் அந்த வீடே அதிர்ந்து போயிருந்தது. நடந்த எதையுமே அறியாத அவளுடைய இளம்வயது மகன் அப்போது தான் வீட்டுக்கு வந்தான். இறைவன் என்னை கைவிட வில்லை. இறைவன் எனக்கு உதவினான் நடந்ததை எல்லாம் அப்போதுதான் அறிந்தான். என் மீது இரக்கப்பட்டது அந்த ஒரு ஜீவன் மட்டும்தான். பொலிஸ் வருமுன் உடனடியாக எனக்குத் தேவையான ஆவணங்களை எடுத்துக்கொண்டு மிக அவசரமாக இந்த விமான நிலையத்துக்கு அழைத்து வந்தான்.

நான் மிகவும் பயத்தோடு வந்தேன். உங்களை சந்தித்த பின்பு தான் எனக்கு போன உயிர் திரும்பி வந்ததைப் போல் இருக்கிறது என்று கூறிமுடித்தாள்.

எனது ஐம்புலன்களும் அடங்கிப் போயின தலை சுற்றுவதைப் போலிருந்தது. என்னால் ஜீரணிக்க முடியவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. அந்தப் பெண்ணையும் கூட்டிக்கொண்டு இலங்கை நோக்கி புறப்பட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபைக் கட்டிப்பிடிக்காதே...

விலகிச் செல்லாதே அன்பே
உன்னை முழுவதுமாய்
புரிந்து கொண்டவன் நான்
என்னில் சரிபாதியாக நீ
மனதுக்குள் இருக்கிறாய்...
சமூகத்துக்குப் பயந்தால்
நாம் வாழ்வதெப்படி?
உன்னை அணுவணுவாய்
புரிந்து வைத்திருக்கிறேனடி.
நீ மாதாந்த அவஸ்தையில்
துவண்டு போகும் அந்த
மூன்று நாட்களில்...
நீ படும் வேதனையைக் கண்டு
கேள்வி கேட்கிறேன் இறைவனிடம்.
தீட்டு என்ற மரபில்
எனக்குச் சம்மதமில்லை
அது ஒரு இயற்கையின் நிஜதி
குற்றமாய் நீ உணர்வானேன்
மூலைக்குள் ஒதுங்கி
இம்சைப்படுவது ஏன்
யதார்த்த வாழ்வில்
இவற்றையெல்லாம் பெரிது படுத்தி
விலகிச் செல்லத் துணியாதே
புரிந்து கொள் என் உணர்வுகளையும்..
நீண்ட கால எல்லையில்
வெவ்வேறு திசைகளில் பிறந்து
காதலால் ஒன்றாகி...
என் துணையாகி
வாழ்க்கைக்கு வசந்தம் தந்தாய்.
ஒரு காதலனாய் கணவனாய்
என்ன குறை விட்டிருப்பேன்
ஓய்வு நேரங்களில் சிந்திக்கிறேன்
பொறி தட்டவே இல்லை
உன்னிடமும் பலமுறை
கேட்டுவிட்டேன் பதிலில்லை
இருந்தாலும் கூட
எம் மணவாழ்வில்
என் சந்தோசம்... திருப்தி
உனக்கும் ஏற்பட்டிருக்குமா....?
எனக்குத் தான் தெரியும்.
கடந்த பத்து மாதமாய்
வயிற்றில் சுமையுடன் நீபடும்
வேதனைகளைப் பார்க்கையில்
கண்ணீர் வரும்...!
காரணகாரியம் பற்றிய சிந்தனை
எழவில்லை.
எம் வாரிசைப் பெற்றெடுக்கும்
மரணவலியுடன் மரத்துவமனையில்
நீ துடிக்கிறாய்
அதே வலியுடன் வாசலில் நான்
உன்னைப் போலவே ஒரு
பெண் குழந்தையைப் பெற்றுக்கொடு.

**ச.கோபிரமணன்**

## இருத்தலுக்கான தப்பித்தல்

கடலுக்குள் இருந்து
திமிறி எழுந்து வந்த
மீன் ஒன்று கரையில்
கட்டியிருந்த வாடியினுள்
தூக்கிட்டுத் தொங்கியது.
எல்லா மீன்களையும்
குளிர்க் கட்டியினுள்
அழுத்தினார்கள்
அதனை மட்டும்
வித்தியாசமாய் பார்த்து
விட்டுச் சென்றனர்.

வலையிலிருந்து பிடுங்கப்பட்டு
குற்றுயிராய் கிடந்த
சில மீன்கள்
இறுதி மூச்சுக்களில்
முணங்கிக்கொண்டன
" இருத்தலுக்கான தப்பித்தல்
எவ்வளவு கடினமானது.
அதோ தூக்கில் தொங்குகின்றானே

**பிரதீப் அரங்காலயா**

## இனியவனே

தத்தி நடக்கத் தொடங்கும்

குழந்தையின் நிலை தான்

என்னதும்...... நீ

வேண்டும் தாங்கிக் கொள்ள.........

உனக்குள் என்னை வைத்து

மூடிக்கொள்ளேன்.........

பின் பிரிவென்ற சொல்லே

நம் அகராதியில் இருக்காது.



**ஜெ.மதிவதனி**

# கவி முரசு

## வெறும் கற்பனை

துரத்தி துரத்தி என்னை
காதலித்த துரதிஸ்டனே
இன்று உன்னை துரத்தி
காதலிக்க தான் தவிர் தவிக்கிறேன்
உன்னை வெறுத்த என்னை
துரத்தி துரத்தி வந்தாயே
உன்னைக்கண்டு ஓடிய நான்
இன்று உன்னை தேடுகிறேன்.



தேநுஜா

அன்று பார்க்காத விழிகள்
உன்னை பார்க்கத் துடிக்கின்றது
உன் குரலோசை என் செவியில் திண்டாடுகிறது.
நீயோ எங்கு சென்றாய் என்று தெரியவில்லை
உன் நிழல்கள் என்னைத்
தொடராதோ? என் நினைவுகள்
உன்னைத் தீண்டாதோ? உனக்காக
காலம் முழுவதும் வாழும்

போலிஜீவன்.

## முட்களின் நடுவே ரோஜாக்கள்

## சிறுவர்களின் நல்வாழ்விற்காக எம்மை அர்ப்பணிப்போம்

உலக சிறுவர்தினம் என்பது வெறுமனே 18 வயதிற்கு உட்பட்ட சிறுவன் அல்லது சிறுமிக்குரிய சம்பிரதாய பூர்வமானதொரு சர்வதேச நாள் மட்டுமல்ல. இந் நாள் சிறுவர்களின் உரிமைகளைப் பற்றி சிறுவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் நினைவு படுத்தும் ஓர் இனிய நாள் ஆகும். சிறுவர்கள் தமது பொறுப்புக்கள் கடமைகளை உணர்ந்து செயலாற்றுவதனூடாக தமது சிறு பராயத்தை வளமானதாகவும் மகிழ்வானதாகவும் உருவாக்கி ஒளிமயமான எதிர்காலத்திற்காக உறுதி எடுத்துக்கொள்ளும் ஓர் நன்நாளாகவும் சிறுவர் தினம் நினைவு கூரப்படுகின்றது.

பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் வளர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் சிறுவர்தினம் என்பது விசேடமான ஓர் செய்தியொன்றை சிறுவர்கள் தொடர்பாக தெரிவித்து நிற்கின்றது. அதாவது, 18 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் அனைவரும் சகல விதமான துஸ்பிரயோகங்களில் இருந்தும், சுரண்டல்கள் பாரபட்சம் காட்டப்படல் போன்றவற்றில் இருந்தும் விலகி சுதந்திரமான - ரம்மியமான சிறுவர்களின் உலகில் வாழ்வதற்கு உரிமையுடையவர்கள் எனும் அறைகூவலே அச்செய்தியாகும். உலக சிறுவர் தினம் என்னும் போது, ஒவ்வொரு நாடுகளுக்கும் பொதுவான உலக சிறுவர்தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் 1954ல் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் நவம்பர் 20ம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது. 1989ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதியே ஐக்கிய நாடுகள் சபையில் சிறுவர் உரிமைகள் குறித்த உடன்படிக்கை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதே நாளில் கனடா, அயர்லாந்து, மற்றும் சுவீடன் உட்பட சில நாடுகள் சிறுவர் தினத்தை அனுஷ்டிக்கின்ற போதிலும் சீனா, ரஷ்யா, கிழக்கு திமோர், போலந்து உட்பட 40 க்கு மேற்பட்ட நாடுகளில் சிறுவர் தினமானது ஜூன் முதலாம் திகதியே கொண்டாடப்படுகிறது.

உலக சிறுவர் தினம் இலங்கையில் அக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகிறது. இதே நாளில் சிங்கப்பூர், கௌதமாலா ஆகிய நாடுகளும் சிறுவர் தினத்தைக் கொண்டாடுகின்றன. இந்தியாவில் ஜவகர்லால் நேரு பிறந்த தினமான நவம்பர் 14ம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு குடும்பத்தினதும்,




முழுச் சமுதாயத்தினதும் மேலும் முழு நாட்டினதும் பெறுமதிமிக்க செல்வங்களான பிள்ளைகள் தமது அடிப்படைத் தேவைகளான உணவு, உடுத்துவதற்கு உடை, பாதுகாப்பான இருப்பிடம் என்பவற்றுடன் அன்பையும் ஆதரவையும் பெற்று உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக அறநெறி மட்டங்களில் மேம்பாடு கண்டு செயற்திறன் மிக்க நற்பிரஜைகளாக உருவாகுவதையே அனைவரும் விரும்புகின்றார்கள். ஆயினும் பிள்ளைகளுக்கு வீட்டிலும் வெளியிலும் வேண்டுமென்றோ அறியாமையின் நிமிர்த்தமோ இழைக்கப்படுகின்ற அநீதிகள், புறக்கணிப்புக்கள் ஆதரவற்ற சூழ்நிலைகள் என்பவற்றால் பிள்ளைகள் மகிழ்ச்சியற்ற நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

பிள்ளைகள் உடல் ரீதியாக, உள ரீதியா, பாலியல் ரீதியாக மாற்றும் புறக்கணிப்பு ரீதியாக வெவ்வேறு வடிவங்களின் துஸ்பிரயோகங்களிற்கு முகம் கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை நீடிப்பது கவலைக்குரியது. நாளுக்கு நாள் குடும்பங்களில் பெருகிவரும் கணவன் - மனைவி பிரச்சனைகள் பொருளாதார நெருக்கீடுகள், வேலைவாய்ப்பின்மை மற்றும் சமூகவிரோத குற்றச்செயல்கள் போன்றவற்றின் விளைவால் சிறுவர் துஸ்பிரயோகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய விதமாக அதிகரித்துச்செல்வது வேதனைக்குரிய விடயமாகும்.

சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் கள ஆய்வுகள் மேற்கொண்டு சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அனுபவங்களிலிருந்து சிறுவர்களினது தற்போதைய சவால்மிக்க சில முக்கிய பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்து அவைகளைத் தீர்ப்பதற்கான சில வழிவகைகளை ஆராயும் முகமாக சில விடயங்களை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. அவையாவன.

**01. மாணவர்கள் மத்தியில் தொலைபேசிப் பாவனை அதிகரிப்பு**

இன்று பாடசாலை கற்றல் - கற்பித்தலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் பொருளாக கைபேசிகள் விளங்குகின்றன. அநாவசியமாக தொலை பேசி (கைபேசி) உரையாடல்கள் மூலம் நேரவிரமாக்கப்படுவதுடன் பிள்ளை தேவையற்ற வேண்டாத தொடர்புகளிற்குள் மாட்டிக்கொள்கின்ற பிரச்சனைகள் ஒரு புறமிருக்க, இணையத்தளத்தினை தொலைபேசியூடக பார்வையிடும் ஏற்பாடுகள் உள்ள இன்றைய நவீன யுகத்தில் பிள்ளைகள் தவறான பாலியல் சம்பந்தமான படங்களை பார்வையிட்டு அநாகரிகமான சமூகவிரோத பாலியல் நாட்டங்களில் தங்களை ஈடுபடுத்த முறப்படுவது அதிகரித்துச் செல்கின்றமையை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் முறைப்பாடுகள் மூலமாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த பெற்றோர்கள் விரைந்து செயலில் இறங்குவது அவசியம். பாடசாலை செல்லும் பருவத்திலுள்ள பிள்ளைகள் எவருக்கும் கைத்தொலைபேசி என்பது அவசியமற்ற ஒன்று. இதனால் பொன்னான நேரங்கள் வீணாகுவதுடன் பிள்ளைகள் முதிர்ச்சியற்ற காதல் தொடர்புகளில் சிக்கி தம்மையும் தமது கல்வி வாழ்க்கையையும் பாழாக்குவதே நிகழ்கின்றது.

(மிகுதி அடுத்தவாரம்)

**ச.அல்பேட் நீகன்**
B.A.Psy., M.Sc. HRD Psy.(India)
**மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை- மாவட்ட செயலகம் - திருகோணமலை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அபிஷேக்குடன் ரீஎண்ட்ரியாகும் ஐஸ்வர்யா



தனது கணவருடன் மீண்டும் நடிக்க வருகிறாராம் ஐஸ்வர்யா ராய்.பாலிவுட்டின் கனவு கன்னியான ஐஸ்வர்யா ராய் குழந்தை பெற்ற பின்பு படங்கள் எதுவும் நடிக்காமல் திரையுலகை விட்டு ஒதுங்கியிருந்தார். பின்பு பன்சாலி இயக்கத்தில் குத்துப்பாடல் ஒன்றுக்கு நடனமாடி ரீ எண்ட்ரி ஆகப்போகிறார் என்றெல்லாம் வதந்திகள் பரவின. ஆனால் குத்துபாடலுக்கு நான் நடனம் ஆடவில்லை என்று மறுத்துவந்தார் ஐஸ்வர்யா.

இந்நிலையில் ரீ எண்ட்ரியை தனது கணவருடன் ஆரம்பிக்கப்போகிறாராம். இயக்குனர், இசையமைப்பாளர் மற்றும் திரைக்கதை எழுத்தாளர் என பன்முகம் கொண்ட ஹிமேஸ் ரேஷாமியா மாசும் படத்தினை ரீமேக் செய்யப்போகிறாராம். இந்த படத்தில் நசுதின் ஷா மற்றும் சபானா அசிம் கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு அபிஷேக் மற்றும் ஐஸ்வர்யாராயை ஒப்பந்தம் செய்ய உள்ளராம்.

இதற்காக பச்சன் குடும்பத்திடம் இருந்து வரும் பதிலுக்காக காத்துக்கொண்டிருக்கிறாராம் ஐஸ்.

## ஸ்டைலிஷ் நடிகை விருது வாங்கிய ஸ்ருதி



ஸ்டைலிஷ் நடிகைக்கான விருதை தட்டிச்சென்றுள்ளார் ஸ்ருதி ஹாசன்.

அண்மையில் துபாயில் சர்வதேச தென் இந்திய திரைப்பட கலைஞர்களுக்கான சிறந்த விருது வழங்கும் விழா நடந்தது. இதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளத் திரைத்துறையினர் கலந்துகொண்டனர். நான்கு மொழியிலும் சிறந்த படம், சிறந்த இயக்குனர், நடிகர், நடிகைகள் உட்பட 19 பிரிவுகளில் விருது வழங்கப்பட்டது.

ஸ்ரீதேவி, போனிகபூர், ஷாகித் கபூர், சோகைல் கான், இலியானா சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். நிகழ்ச்சிகளை ஆர்யா, ராணா, ஸ்ரேயா, பார்வதி ஓமனக்குட்டன் தொகுத்து வழங்கினர். விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது சவுகார் ஜானகிக்கு வழங்கப்பட்டது. மேலும் ஸ்டைலிஷான நடிகைக்கான விருது ஸ்ருதி ஹாசனுக்கு வழங்கப்பட்டது.

தனக்கு கிடைத்த விருது குறித்து ஸ்ருதி கூறுகையில், ஸ்டைலிஷ் நடிகைக்கான விருது எனக்கு கிடைத்தது, மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அதுவும் தலைசிறந்த நடிகையான ஸ்ரீதேவி கையால் விருது வாங்கியது மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சியளிக்கிறது என பெருமிதம் பொங்க தெரிவித்துள்ளார்.

## அமீர்கானுக்கு அமெரிக்க விருது!

பாலிவுட்டின் மிஸ்டர் பர்பெக்ஷனிஸ்ட் நடிகர் ஆமீர்கானுக்கு அமெரிக்க விருது வழங்கப்படவுள்ளது.

இந்தியில் பிரபல நடிகர், தயாரிப்பாளர் மற்றும் தொகுப்பாளர் என பன்முகம் கொண்ட அமீர்கான் சத்யமேவஜெயதே என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இவர் தொலைக்காட்சியில் தொகுத்து வழங்கிய இந்நிகழ்ச்சி இந்தியாவிலுள்ள மக்களை மட்டுமல்லாமல் உலகம் முழுக்க உள்ள இந்திய மக்களிடத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிகழ்ச்சியில் இந்தியா எதிர்கொள்ளும் சில சமூக பிரச்சனைகளையும், சவால்களையும் வெளிச்சம் போட்டு காட்டியிருந்தார் அமீர்கான்.

மக்களிடத்தில் விழிப்புணர்வு எற்படுத்தும் விதமாக ஆமீர்கான் நடத்திய இந்த நிகழ்ச்சியை பாராட்டும் விதமாகவும், ஆமீரின் சமூக சேவையை கௌரவிக்கவும் அமெரிக்காவின் 'எப்ரோட் மீடியா' நிறுவனம் முடிவு செய்து, அவருக்கு ஒரு சிறப்பு விருது வழங்க இருக்கிறது. இதற்கான விழா அடுத்த மாதம் 28ம் திகதி அமெரிக்காவில் நடைபெறவிருக்கிறது. இந்த விழாவில் கலந்துகொண்டு ஆமீர அந்த விருதை பெறவிருக்கிறார்.

சமீபத்தில், பிரபல டைம் பத்திரிகை தேர்ந்தெடுத்த உலகின் 100 உன்னத மனிதர்களில் அமீர் ஒருவராக தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



-சமீரா ரெட்டி-

# சினிமுரசு

## ஆபாச உடையில் சமீரா ரெட்டி



ஆபாச உடை அணிந்து நிகழ்ச்சியில் பங்கேற்றதாக சர்ச்சை கிளம்பியதால் கோபம் அடைந்துள்ளார் சமீரா ரெட்டி.

வாரணம் ஆயிரம், அசல், நடுநிசி நாய்கள் படங்களில் நடித்தவர் சமீரா ரெட்டி.

மும்பையில் அண்மையில் நடைபெற்ற பேஷன் நிகழ்ச்சி ஒன்றில் அரைகுறை ஆடையுடன் தோன்றினார் சமீரா ரெட்டி. இந்த உடை ஆபாசமாக இருந்ததாக சர்ச்சை கிளம்பியுள்ளது.

இது குறித்து சமீரா ரெட்டி கூறுகையில், பேஷன் நிகழ்ச்சியில் எந்த மாதிரி உடை அணிய வேண்டும், மற்ற விழாவில் எந்த உடை அணிய வேண்டும் என்பதெல்லாம் எனக்கு தெரியும். அதை யாரும் எனக்கு சொல்லித் தர தேவையில்லை. பேஷன் நிகழ்ச்சியில் கவர்ச்சியான உடையில்தான் தோன்றினேன். அது சிலருக்கு ஆபாசமாக தெரிந்தால் அது பற்றி நான் கவலைப்பட மாட்டேன்.

ஹாலிவுட்டில் இதுபோன்ற ஆடைகளில் நடிகைகள் தோன்றுவது வழக்கம். அதுவும் பேஷன் நிகழ்ச்சியில் கவர்ச்சியாக தோன்றாமல் எப்படி இருக்க முடியும்? என்று கூறியுள்ளார்.

## ஆஸ்கார் விருதை இழந்த விஸ்வரூபம்

உலகின் மிகப்பெரிய விருதான ஆஸ்கர் விருதினை இழந்துள்ளது விஸ்வஷருபம். அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் ஆஸ்கர் விருதுக்கான இந்திய படத்தின் தேர்வு நடந்தது.

இதில் தேசிய விருது பெற்ற குஜராத்தி படமான தி குட் ரோட், பகாக் மில்கா பகாக், இங்கிலீஸ் விங்கிலீஸ், லஞ்ச் பாக்ஸ், பிருத்விராஜ் நடித்த மலையாள படமான செல்லுலாயிட், கமலின் விஸ்வஷருபம் உள்பட 22 படங்கள் போட்டியிட்டது.

இறுதி சுற்றுக்கு தி குட் ரோட், பகாக் மில்கா பகாக், விஸ்வஷருபம் ஆகிய மூன்று படங்கள் வந்தது. 19 பேரைக் கொண்ட தேர்வு குழு 5 மணிநேரம் தீவிரமாக விவாதித்து, ஆலோசித்து தேசிய விருது பெற்ற குஜராத்தி படமான தி குட் ரோட் படத்தை தேர்வு செய்து அறிவித்தனர். இதனால் கடைசி வரை நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்பட்ட விஸ்வஷருபம் ஆஸ்கர் போட்டி வாய்ப்பை இழந்தது.

## வெளியீட்டில் முந்தும் நய்யாண்டி



ஏற்கனவே தெரிவித்த திகதிக்கு முன்னதாகவே தனது நய்யாண்டி படத்தை வெளியிடும் ஐடியாவில் இருக்கிறாராம் தனுஷ்.

களவாணி, வாகை சூடவா ஆகிய படங்களை அடுத்து சற்குணம் இயக்கத்தில் தயாராகியுள்ள படம் நய்யாண்டி.

இதில் தனுஷ் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடி போட்டுள்ளார் நஸ்ரியா நசீம் இவர்கள் தவிர சரண்யா பொன்வண்ணன், சூரி, சத்யன், லட்சுமி ராமகிருஷ்ணன் மற்றும் பலர் நடிக்கிறார்கள். இயக்குனர் சற்குனத்தின் நண்பரான ஜிப்ரான் இந்த படத்துக்கு இசையமைக்கிறார். பொல்லாதவன், ஆடுகளம் படங்களைத் தொடர்ந்து பைவ் ஸ்டார் கதிரேசன் இப்படத்தைத் தயாரிக்கிறார்.

குத்துவிளக்கு செய்யும் கடை வைத்திருக்கும் நாயகன், பல் மருத்துவம் படிக்கும் நாயகி இவர்கள் இருவருக்கும் இடையில் உண்டாகும் காதல், இது தான் படத்தின் கதைக்கரு. அக்டோபர் 11ம் திகதி நய்யாண்டி படம் வெளி வருவதாக திட்டமிடப்பட்ட நிலையில், சில தினங்களுக்கு முன் படத்தின் ஆடியோ வெளியிடப்பட்டது. இந்நிலையில், ரசிகர்களே நீங்கள் எதிர்பார்க்கும் தினத்திற்கு முன்னதாகவே படம் வெளியாகலாம் என சூசகமாக தனது ட்விட்டர் பக்கத்தில் தகவல் வெளியிட்டுள்ளார் தனுஷ்.

## தமன்னாவுக்கு கைகொடுத்த கவர்ச்சி



தான் காட்டி வந்த தாராள கவர்ச்சியால் 2 படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார் தமன்னா.

விஜய், சூர்யா, கார்த்தி என முன்னணி நாயகர்களுடன் ஜோடியாக நடித்துவந்த தமன்னா கடந்த சில வருடங்களாக தமிழ் படங்களில் கவனம் செலுத்தாமல் தெலுங்கு படங்களில் மட்டும் நடித்து வந்தார். போட்டி நடிகைகளின் ஆதிக்கத்தால் பட வாய்ப்புகள் குறைந்தது. பிறகு பாலிவுட்டில் கவனத்தை திருப்பினார் தமன்னா.

ஹிம்மத்வாலா என்ற படம் மூலம் இந்தி படவுலகிற்குள் நுழைந்தார். ஆனால் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை.

தமிழில் 1 வருடத்துக்கும் மேலாக நடிக்காமல் ஒதுங்கி இருந்த தமன்னா தற்போது அஜீத் ஜோடியாக வீரம் படத்தில் நடிக்கிறார்.

இதுதவிர தெலுங்கு, தமிழில் அவருக்கு வேறுபடம் எதுவும் கைவசம் இல்லை. ஹிம்மத்வாலா படம் தோல்வி படமாக அமைந்தாலும் அதில் கவர்ச்சி தூக்கலாக நடித்திருந்தார். அது இப்போது கைகொடுத்திருக்கிறது. அக்ஷய்குமாருடன் என்டர்டெய்ன்மெண்ட் என்ற படம் உள்ளிட்ட 2 படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகி உள்ளார் தமன்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் தோல்வியில் இருந்து மீள நிபுணர்கள் கூறும் அறிவுரை



காதல் என்பது ஒரு புனிதமான ஒன்று. அத்தகைய காதல் தற்போது யாரிடமும் நீடிப்பது இல்லை. அதற்கு காரணம் யாரும் யாரையும் நன்றாகப் புரிந்து கொள்ளாதது ஆகும். காதலில் தோல்வி அடைந்த அனைவரும் பெரும்பாலும் தவறான முடிவையே எடுக்கின்றனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு துணையாக, ஆறுதலாக நண்பர்களே இருக்க முடியும். அவர்களுக்கு ஒரு நல்ல வழியை அவர்களால் மட்டுமே காட்ட முடியும். அவர்கள் மனநிலையை மாற்ற நண்பர்கள் என்னவெல்லாம் செய்யலாம் என்று ஆலோசனை கூறியுள்ளனர் நிபுணர்கள். நீங்களும் தெரிந்து கொள்ளுங்களேன்.

முதலில் அவன்,அவளிடம், பொருத்தமானவன் அல்ல என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் அவன்,அவள் உன்னை நன்றாக புரிந்து கொள்ளவில்லை, அவன் அவள் உன்னை நன்கு புரிந்து இருந்தால் உன்னை விட்டுப் பிரிந்து சென்றிருக்க முடியாது என்று அவர்களைப் பற்றி தவறான எண்ணத்தை வர வைக்க வேண்டும்.

அவர்களது மனநிலையை மாற்ற நம்முடைய நண்பர்கள் சிலரை அறிமுகப்படுத்தி அவர்களது கவனத்தை திருப்பலாம். அவர்களை வெளியே அழைத்துச் சென்று வெளியுலகத்தைப் பற்றியும் கூறலாம். இதன் மூலம் அவர்களது வாழ்க்கைப் பாதையை மாற்றலாம். காதல் தோல்வி அடைந்துவிட்டால் அத்துடன் வாழ்க்கை முடியவில்லை.

உனக்கு அவன்,அவள் மட்டும் வாழ்க்கை இல்லை. உனக்கு நண்பர்கள் இருக்கிறோம். அதைவிட உன் பெற்றோர்களை நினைத்துப் பார். அவர்கள் உன் மீது அளவுகடந்த பாசம் வைத்திருக்கிறார்கள், உன் வாழ்க்கை பற்றிய அவர்கள் கனவை நினைத்துப் பார் என்றெல்லாம் கூறலாம்.

## வேகம் கூடிய இணைய உலாவி வெளியிட்டது மைக்ரோசாப்ட்



இயங்குதள முன்னணியில் திகழும் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உலாவியே Microsoft ஆகும். உலகில் பயனர்களால் பயன்படுத்தப்பட்டுவரும் உற்பத்தியில் மைக்ரோசொப்ட் இணைய Internet Explorer அதிகளவான இணைய உலாவிகளில் ஒன்றான இதன் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

Microsoft Internet Explorer 11 எனும் இப்பதிப்பானது முன்னைய பதிப்புக்களை விடவும் 30 சதவிகிதம் வேகம் கூடியதாகக் காணப்படுகின்றது.

எனினும் இந்த உலாவியானது விண்டோஸ் 7 இயங்குதளத்தில் பயன்படுத்தக்கூடியவாறே வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.




## கண்களையும் கவனியுங்கள்



நமது சந்தோ'ம், துக்கம் எதுவானாலும் அதை காட்டிக் கொடுப்பது கண்கள் தான். அப்படிப்பட்ட கண்கள் புத்துணர்ச்சியுடன் இருந்தால் தானே பார்க்க அழகாக இருக்கும்.

கண்களின் அழகை பராமரிக்க தினமும் எட்டு மணிநேரம் தூக்கம் மட்டுமல்லாமல் கால்சியம், விட்டமின்கள் நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும்.

அதாவது பால், பால் உணவுகள், கீரை வகைகள், முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப்பழங்கள் பச்சை காய்கறிகளை உட்கொள்ள வேண்டும்.

கண்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் கடிகாரம் சுற்றும் முறையிலும், எதிர்முறையிலும் மூன்று முறை சுற்ற வேண்டும். மேலும் அருகில் உள்ள பொருட்களை பார்த்துவிட்டு தூரத்தில் உள்ள பொருட்களை பார்க்க வேண்டும்.

கட்டைவிரலை நடுவில் வைத்துக்கொண்டு அதனை இடமாகவும் வலமாகவும் விரலை மட்டும் நகர்த்தி தலையை திருப்பாமல் வெறும் பார்வையை மட்டும் திருப்பி பார்க்க வேண்டும். தினமும் இந்த பயிற்சியை தொடர்ந்து செய்தால் கண்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

நீண்ட நேரம் கணனி அல்லது தொலைக்காட்சி முன் அமர்ந்து வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி ஏதேனும் பச்சை வெளியைப் பார்க்கலாம் அல்லது கண்களுக்கு குளிர்ச்சி தரும் நீல நிறங்களை பார்க்கலாம்.

ஆரஞ்சு பழத்தை சாறாக பிழிந்து குளிர்சாதனப்பெட்டியில் வைத்து கட்டியான பின்னர் ஒரு துணியில் கட்டிக்கொண்டு கண்களுக்கு மேல் ஒத்தி எடுத்தால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.

## BlackBerry Z30 ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகம்

BlackBerry நிறுவனம் தனது புதிய உற்பத்தியான BlackBerry Z30 ஸ்மார்ட் கைப்பேசியினை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கைப்பேசியானது 5 அங்குல அளவு மற்றும் 1280 x 720 Pixels Resolution உடைய HD தொடுதிரையைக் கொண்டுள்ளது.

மேலும் இவற்றில் 1.7GHGz வேகம் கொண்ட Dual Core Qualcomm Snapdragon S4 Plus Processor, பிரதான நினைவகமாக 2GB RAM என்பனவும் காணப்படுகின்றன.

இவை தவிர சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவும், 8 மெகாபிக்சல்களை உடைய கமெராவும் தரப்பட்டுள்ளது.






**வினாடி முட்களின் அசைவு அப்போதென்னவோ அப் புலனாய் வாளர்களுக்கு மிகத் தாமதமாக இருப்பதாகவும், அதிக அசூசையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. உள்நுழையும் ஆறு பேரும் கைச்சுடுகலன்களைத் தயாராக்கிக் கொள்ள நேரம் சரியாக அதிகாலை 2 மணி என்பதைச் சுட்டியது.**

வினாடி முள் இலக்கம் 12ச் சுட்ட, வேடனிடமிருந்தும் உத்தரவு சடுதியாக வந்தது.

"இது வேடன்.. பறவை1க் கொல்க" சங்கேதக் குறியாய் தகவல் காதுகளில் விழ அலிக வின் கதவின் ஓரத்தில் நிலையெடுத்திருந்த இருவரில் இடது பக்கமாக நிலையில் இருந்தவர் அழைப்பு மணியை இடைவிட்டு இடைவிட்டு ஒலிக்கச் செய்தார்.

பல தடவைகள் அவ்வாற ஒலிக்கச் செய்தும் பதிலேதும் கிடைக்காததால் கதவின் மீது பலமாகத் தட்டத் தொடங்கினார் வலது பக்கத்தில் நிலையில் இருந்தவர்.

உள்ளே வெளிநாட்டு அழைப்பொன்றைச் சுகமாகக் கதைத்தபடி இருந்த அலிக விற்கு அழைப்பு மணி பலதடவை அழைத்தது தெளிவாகக் கேட்டது. மெதுவாக நேரத்தை தனது வீட்டுச் சுவரில் "ரேடியம்" பூசப்பட்ட மணிக்கூட்டில் கவனித்தான். நேரம் அதிகாலை 2 மணி 5 நிமிடம். அடுத்து தடதடவெனத் தட்டப்படும் தனது கதவின் ஒலி அவனை நிலைகுலையச் செய்தது. புலன்களில் ஏதோ ஓர் குறுகுறுப்பு அவனைச் சித்திரவதை செய்தது... அவனது ஆழ்மனம் திடீரென அதிரத் தொடங்கியது.... ஓடு.... அலிக...ஓடு...

அதே வேளை அவனது மனைவியும் கண்விழித்து விட்டாள்.... மெதுவாக எழும்பி அலிக வின் அறையை நோக்கி நடந்து வந்த அவள் அலிக பதட்டப்படுவதைக் கவனித்தாள் "ஏன் வேர்த்துப் போய் இருக்கின்றீர்கள்... ஆரோ இப்பிடி கதவைப் போட்டு அடிக்கினம்... நான் போய்த் திறக்கவா?...." என்ற அவளின் கேள்வி வாயால் வந்து விழ முன்னர் அவன் மெதுவாகக் கத்தினான்... "வேணாம்.. நான் பின் கதவால் ஓடப்போகிறேன்....ஏன் ஓடுறன் என்று பின்னர் சொல்லுகிறேன்..." "யாரும் புது ஆட்கள் நான் எங்கே என்ற கேட்டால் நான் வீட்டில் இல்லை என்று சொல்லு"

வாய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வேகவேகமாக உள்ளாடைகளை அணிந்து காட்சட்டையொன்றுக்குள் மாறிக் கொண்டான் அவன்.. அணைக்கப்படாத கைத்தெலைபேசியைக் காற்சட்டைப் பைக்குள் போட்டு கொண்டு பரபரவென......

தனது அறையில் இருந்து வெளியே வந்து விக்கித்து நிற்கும் மனைவியை ஒருபுறம் தள்விட்டு பின் கதவை நோக்கி ஓடி....... அலிக பின்கதவின் தாள்பாளைச் சத்தம் செய்யாது நீக்கிய கணத்தில்....

பின் கதவைத் திறக்க அலிக முனைய, நிலைமையைப் புரிந்து கொண்ட, பின்புறக் கதவுக்கருகில் மரத்திலிருந்து இறங்கி நின்ற புலனாய்வாளர்களுள் ஒருவர், தாள்பாள் நீக்கிய கதவைக் கணப்பொழுதும் தாமதிக்காமல் ஓங்கி உதைத்தார்.

அதிர்ச்சி, உள்ளுணர்வின் உறுத்தல், மெல்ல உடம்பெங்கும் பரவத் தொடங்கியிருந்த பயம்....

எதிர்பாராமல் முகம் மீது மோதிய கதவின் தாக்குதலை எதிர்பாக்கவி[illegible] அலிக... [illegible] தாக்குதலை [illegible] தடாரென பின்புறமாக விழுந்தான் அவன்.

விழுந்ததைக் கண்ணுற்ற அவனது மனைவி "ஐயோ அம்மா" என்று கத்திக் கொண்டோடி, மின்குமிழ் ஆளியை உயிர்ப்பித்து விட்டு அலிகவுக்கருகில் நிற்பவனை நிமிர்ந்து பார்த்தாள்.... அவன் அண்மையில் அவள் வீட்டிற்கு வந்து விலாசமொன்றைக் கேட்டுச் சென்றவன்....

அலிக விழுந்த வெகத்திலேயே கத்தத் தொடங்கினான்.... "யார் நீ...நாயே...களவெடுக்கவா வந்தாய்.... நான் யாரென்று தெரியுமா?...." எனச் சத்தமிட்டான்.

சத்தமெழும்புமாக இருந்தால் அத் தொடர்மாடிக்குடியிருப்பில் பலருக்கு விடயம் தெரிந்து களோபரமாகி விடும் என நினைத்த புலனாய்வாளர்கள் இருவரில் ஒருவர் வேகமாகத் தனது அடையாள அட்டையைக் காட்டி மெதுவாக மனைவியை நோக்கி "நாங்கள் விசேட புலனாய்வுக் காவல்துறையினர்..." என்று கூறிக் கொண்டே அலிகவினை நோக்கி கடும் குரலில் "கத்தாதே ...நாயே.... நாங்கள் காவல்துறையினர்" என்று சொல்லும் போதே.. அலிக எதையோ கத்தத் தொடங்கினான். அதைத் தடுப்பதற்கு தனது கைச்சுடுகலனை அவனது வாயில் திணித்தார். மற்றைய புலனாய்வாளர் முன் புறக் கதவை நோக்கியோடித் தாள்பாளைத் திறந்து அனைவரையும் உள்ளே வர வழி சமைத்தார்.

தனது கைச்சுடுகலன் சுடத் தயார் நிலையில் இருந்தாலும் அதன் [illegible] இயக்கப்பட்டிருந்ததால் [illegible]னின் குதிரையை இழுத்தாலும் அது சுடப் போவதில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட புலனாய்வாளர் அவனது வாயை அடக்கவும் ஆட்டத்தைக் குறைக்கவும, மனைவியை அமைதியாக்கவும் அலிகவின் வாய்க்குள் தனது கைச் சுடுகலனைச் செலுத்தினார். அத்துடன் அனைத்தும் அடங்கிப் போயிற்று.

நிலையெடுத்திருந்த ஆறு புலனாய்வாளர்களும் அவனது வீட்டினுள் இருந்தனர். மனைவி எதுவும் பேசாமல் கதிரையில் முகத்தைக் கையில் தாங்கியபடி இருந்தாள்.

அலிக கைகள் கட்டப்பட்டு கதிரையொன்றில் இருத்தி வைக்கப் பட்டிருந்தான்....

புலனாய்வாளரின் தொடர்பாடல் சாதனம் உயிர்த்தது. "வேடன்... இது கழுகு1..... பறவை1 பாதகமின்றி வலையில்... பறவை1 பாதகமின்றி வலையில்" " கழுகு1... இது வேடன்...பிரதி செய்யப்பட்டது.... பறவை2னை கொல்க"

அலிக வின் இயங்கிக் கொண்டிருந்த தொலைபேசி அப்போது மறுபுறத்தில் அணைக்கப்பட்டிருந்தது. அழைப்பின் இலக்கத்தைப் பதிவு செய்து கொண்ட புலனாய்வாளர் அத் தொலைபேசியிலிருந்து டொடியை அழைத்து வெளியே வருமாறு அலிகவை பணித்தார்.

முதலில் அலிக மறுத்தாலும் டொடியினை வெளியே வருமாறு அவர் கூறியதைக் கேட்டதும் அவனது உடல் படபடக்கத் தொடங்கியது.

தான் வலைக்குள் விழுந்து விட்டதை உணர்ந்து கொண்ட அவன் புலனாய்வாளரையே அழைப்பை மேற்கொள்ளுமாறு வேண்டினான்.....

கைகள் கட்டப்பட நிலையில் இருந்ததால் டொடிக்கான அழைப்பை அவர் மேற்கொண்டார்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நைஜீரியா ஏ விசொக்கர் அகடமி கால்ப்பந்தாட்ட அணி கல்முனைக்கு விஜயம்

நைஜீரியா ஏ.வி.சொக்கர் அகடமி கால்ப்பந்தாட்ட அணி கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. கல்முனை பிர்லியன்ட் விளையாட்டுக் கழகத்துடனான கால்ப்பந்தாட்ட போட்டியில் கந்துகொள்வதற்காகவே குறித்த அணியினர் கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த போட்டி கடந்த 20 ம் திகதி கல்முனை மாநகர மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது நைஜீரியா ஏ.வி.சொக்கர் அகடமி கால்ப்பந்தாட்ட அணி 3- 1 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. பிர்லியன் விளையாட்டுக் கழக தலைவர் ஏ.எம்.சம்சுதீனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த போட்டியிற்கு அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன், இராணுவ அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



பெயர் : மகேந்திரா சிங் தோனி
வயது : 32 வருடங்கள்
பிறந்த திகதி : 1981.07.07
வலது கை துடுப்பாட்ட வீரர்
விக்கட் காப்பாளர்



| | MAT | INNS | RUNS | H/S | AVG | 100s | 50s | CTs | STs |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Test | 77 | 121 | 4209 | 224 | 39.07 | 06 | 28 | 212 | 36 |
| ODI | 226 | 200 | 7358 | 184* | 51.54 | 08 | 48 | 212 | 75 |
| T20I | 42 | 39 | 748 | 48* | 31.16 | 00 | 00 | 21 | 08 |

## காதலியை கரம் பிடிக்கிறார் ஜோகோவிக்



பிரபல டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிக் தனது காதலியை மணமுடிக்க உள்ளார். சர்வதேச டென்னிஸ் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகிப்பவர் செர்பிய நாட்டை சேர்ந்த நோவக் ஜோகோவிக். இவர் தனது நீண்ட கால தோழியான ஜெலீனா ரிஸ்டிக்கை கரம் பிடிக்கிறார். இவ்விடயம் குறித்து டுவிட்டரில், மிக்க மகிழ்ச்சி! வாழ்த்துகளுக்கு எனது நன்றி என தனது நண்பர்களை குறிப்பிட்டு கருத்து தெரிவித்துள்ளார். இவரது காதலியான ஜெலீனாவும் செர்பிய நாட்டை சேர்ந்தவர் தான். காதலி இவருக்கு முத்தமிடுவது போன்ற புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார். மேலும், தொடர்ந்து 100வது வாரமாக முதலிடம் வகிக்கும் டென்னிஸ் வீரர் என்ற பெருமையையும் ஜோகோவிக் சமீபத்தில் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்துவுக்கு அர்ஜுனா விருது

இந்திய பாட்மின்டன் அணியின் இளம் வீராங்கனை சிந்து, வயது 18. சமீபத்தில் குவாங்சுவில் நடந்த உலக பாட்மின்டன் சாம்பியன்ஸ் தொடரில் வெண்கலம் வென்றார். இதை பாராட்டும் விதமாக, அர்ஜுனா விருதுக்கான பட்டியலில் இடம்பெற்றார். கடந்த ஆகஸ்ட, 31ல் இவ் விருதுகளை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கினார். ஆனால், இந்தியன் பாட்மின்டன் லீக் தொடர் பைனலில் விளையாடியதால் சிந்துவால் பங்கேற்க முடியவில்லை. கடந்த 25 ம் திகதி இந்திய விளையாட்டு ஆணைய கூட்டத்தில் (எஸ்.ஏ.ஐ.,) இவருக்கு அர்ஜுனா விருது தரப்பட்டது. அப்போது, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் ரூ. 5 லட்சம் பரிசு வழங்கி கௌரவித்தார்.



## 8 வயதில் 5 விக்கெட் வீழ்த்தி சிறுவன் சாதனை

கங்கா லீக் தொடரில் குறைந்த வயதில் 5 விக்கெட் வீழ்த்தி சாதித்தார் முஷீர் கான். மும்பை கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் 1948 முதல் கங்கா லீக் கிரிக்கெட் தொடர் (19 வயது) நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு, 8 வயதில் ஸ்போர்ட்ஸ் பீல்டு கிரிக்கெட் கிளப் அணிக்காக களமிறங்கினார் முஷீர் கான். இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர், கத்தோலிக் ஜிம்கானா அணிக்கெதிரான போட்டியில் 18 ஓவரில் 78 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தினார். 65 ஆண்டு கங்கா லீக் தொடரில், குறைந்த வயது வீரர் ஒருவர் 5 விக்கெட் வீழ்த்துவது இது தான் முதன் முறை. பின் களமிறங்கிய ஸ்போர்ட்ஸ் பீல்டு அணி திணறியது. முஷீர் கான் சகோதரர் சர்ப்ராஸ் கான், வயது 16. இவர் பள்ளி கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த சச்சினின் சாதனையை முறியடித்தவர் ஆவார்..

## மர்ஹூம் MI அஹமட் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் காத்தான்குடி அணியிடம்

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவருமான மர்ஹூம் அல்ஹாஜ் MI அஹமட் அவர்களின் ஞாபகார்த்தமாக நிந்தவூர் லகான் விளையாட்டுக்கழகம் நடாத்திய கடின பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் காத்தான்குடி விளையாட்டுக்கழகம் சம்பியனானது. இப்போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு 10,000/= ரூபா பணப்பரிசும், வெற்றிக்கேடயமும், இரண்டாம் நிலையினை பெற்ற நிந்தவூர் லகான் அணிக்கு 6,000/= ரூபா பணப்பரிசும் வெற்றிக்கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது.

லகான் விளையாட்டுக்கழகத்தின் முகாமையாளர் றிலா இப்ராஹிம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதான பொலிஸ் பரிசோதகர் ML றபீக், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எ. நசீர் அஹமட் மற்றும் இன்னும் பல அதிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதேவேளை மர்ஹூம் அலஹாஜ் MI அஹமட் அவர்கள் கடந்த 1994 – 1998ம் ஆண்டு காலப்பகுதியில் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளராக கடமையாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

## லலித் மோடிக்கு ஆயுள் கால தடை

இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பின் ஸ்தாபகரும், அதன் முன்னாள் பணிப்பாளருமான லசித் மோடிக்கு ஆயுள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இன்றைய விசேட பொதுக் கூட்டத்தின் போது அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் பணிப்பாளராக இருந்த போது லலித் மோடி கடுமையான குற்றங்களிலும், ஒழுங்கமின்மைகளிலும் ஈடுபட்டார் எனவும், அதன் காரணமாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிகளின் படி அவரை ஆயுளுக்கும் தடை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையின் காரணமாக தனது ஆயுளுக்கும் லலித் மோடியால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகத்தில் அங்கம் வகிக்க முடியாது என்பதோடு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் காணப்படும் கழகங்களின் நிர்வாகங்களிலும் அவரால் அங்கம் வகிக்க முடியாது.

இன்றைய விசேட கூட்டத்தை நடாத்துவதற்கு லலித் மோடி எதிர்ப்புத் தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த போதிலும், அந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிடாது என அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில் லலித் மோடி மீதான தடை அறிவிக்கப்பட்டது.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் தொலைக்காட்சி உரிமங்களில் குழறுபடிகள், வீரர்களின் ஏலத்தில் குழப்பங்கள், கழகங்களை அச்சுறுத்தியமை, நிதிகளைச் சரியாகக் கையாளாமை உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் லலித் மோடி மீது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒழுக்க செயற்குழுவினால் நிரூபிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பூர் ஸ்ரீகனேசா விளைாட்டுக் கழகம் மீண்டும் முதலாம் இடம்

சம்பூர் சிறுமலர் விளைாட்டுக் கழகத்தினால் சம்பூர் பிரதேசத்தின் ஒரு பகுதி மக்கள் வாழும் கட்டைபறிச்சான் நலன்புரி நிலைத்தில் உள்ள கழக மைதானத்தில் நடாத்தப்பட்ட அணிக்கு நான்கு பேர் கொண்ட (பகல், இரவாக) நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 14.09.2013 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கழகத் தலைவரான திரு.செ.மதன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகி போட்டிகள் 15.09.2013 அன்று காலை 9.00 மணிளவில் முடிவுற்றது.

இந்நிகழ்வில் 224 ஆவது Brigade Commander அவர்களும், Commanding Officer அவர்கள் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினராக மூதூர் பிரதேச சபை உறுப்பினரும், மூதூர் பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவருமான திரு...நாகேஸ்வரன் அவர்களும், மூதூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு.க.கனகசிங்கம், பொது முகாமைாளர் திரு.கு.காளிராசா, கட்டைபறிச்சான் வடக்கு கிராம அதிகாரி திரு.க.செல்வரெத்தனம், சம்பூர் மீனவர் சங்கத் தலைவர் திரு.எஸ்.ஈஸ்வரன், தபால் அலுவலர் திரு. கோ.குமாரநாயகம் ஆகிய பிரதிநிதிகளும் விருந்தினராக கலந்து சிறப்பித்தனர்.



லியோ கரம் சுற்றுப்போட்டி 2013
ஒழுங்கமைப்பு : திருகோணமலை நகர லியோ கழகம்
வெற்றிப்பணப்பரிசு : ரூபாய் 2,500.00
குறிப்பு : சகல சர்வதேச கரம் சுற்றுப்போட்டி விதிமுறைகளுக்கு அமைவாக
திகதி : 12.10.2013
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம்
இடம் : தி.இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
பதிவுக்கட்டணம் : 100.00 ரூபாய் மட்டும்
தொடர்புகளுக்கும் பதிவுகளுக்கும் லியோ ஹரிபிரஷாத் : 0755220228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## the SUNDAY TIMES

### இலங்கைமீனை ஏற்றுமதி செய்யும் தமிழ்நாடு

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் புகுந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தமிழ்நாடு பல பில்லியன் ரூபா பெறுமதியான மீனை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சம்பாதிப்பதாகத் தெரிகின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வருடாந்தம் பல பில்லியன் ரூபா பெறுமதியான மீனை தமிழ்நாடு ஏற்றமதி செய்து வருகின்றது. இலங்கைக் கடற்பரப்பில் புகுந்து தொழில் செய்யும் இந்திய மீனவர்கள் தமது வாழ்வாதாரத்திற்காக அத் தொழிலில் ஈடுபடுகின்றார்களா எனப் பார்த்தால் அவ்வாறில்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது.

இம் மீன்பிடி நடவடிக்கையானது ஏற்றுமதித் தொழில் நடவடிக்கையாகத் தமிழ்நாட்டில் பரிணமித்துள்ளது என்றே கூறலாம். 2004-2005ல் தமிழ்நாட்டின் மீன் ஏற்றுமதி வருமானம் 2,995 கோடி இந்திய ரூபாய்களாக இருந்ததை இங்கு நினைவு கூறலாம்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீன்பிடி றோலர்களால் மீன் பிடி நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் ஐக்கிய நாடுகள் சபையால் தடை விதிக்கப்பட்ட நுட்பங்களாக இருப்பதால் இலங்கை மீனவரின் வாழ்வாதாரமா மீனபிடித் துறை நலிவடைந்து செல்வதைக் காணலாம்.

### இராசதந்திரிகளின் பயணச் செலவுகளுக்கு ஆப்பு

இலங்கைத் தூதுவராலயங்களின் பயணச் செலவுகளைக் குறைத்துக்கொள்ளுமாறு வெளிநாட்டு அமைச்சு அனைத்துத் தூதுவராலயங்களையும் கேட்டுக் கொண்டுள்ளது. தேவையற்ற பயணங்களைக் செய்யாமலிருக்குமாறு கேட்கப் பட்டுள்ளதாக அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

அரை வருடத்திற்கு ஒருமுறை மீள் பார்வைக்குட்படும் தூதுவராலயங்களின் செலவுகளினைக் கண்காணித்த பின்னரே இக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள தூதுவராலயங்களின் பயணச் செலவுகளே ஏனைய நாடுகளிலுள்ள தூதுவராலயங்களின் பயணச் செலவுகளை விட மிக அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

65 அலுவலகங்களில் சுமார் 300 அலுவலர்கள் தூதுவராலயங்களில் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயணச் செலவுப் பாதீடாக ரூபா 250 மில்லியன் இவ்வருடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பகிடிவதை – முரண்படும் செய்திகள்

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்ததாக ஊடகங்களில் வெளியான பகிடிவதைச் செயற்பாடு தொடர்பாகப் பல்கலைக அறிக்கைகள் ஒன்றைச் சொல்ல உயர் கல்வி அமைச்சின் அறிக்கைகள் வேறொன்றைச் சொல்கின்றன.

மாணவர்களாலும் அவர்களின் பெற்றோராலும் உயர் கல்வி அமைச்சிற்கு அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை அடுத்து பல்கலைக் கழகத் துணைவேந்தரை விசாரணைகளை செய்யுமாறு அமைச்சு அறிவித்தது.

ஆனால் விசாரணைகளைத் தொடக்கி வாரம் ஒன்ற கழிந்துள்ள நிலையிலும் அவ்வாறானதொரு கடுமையான பகிடிவதை அங்கு நடந்ததாகத் தெரியவரவில்லை என துணைவேந்தர் அறிவித்துள்ளார்.




## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### அமைதியான சூழலில் வாக்களிப்பு

தேர்தல்கள் மிகவும் அமைதியான சூழலில் நிகழ்ந்ததாகவும் பெருமளவு வாக்காளர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக வருகை தந்ததாகவும் தேர்தல்கள் கண்காணிப்பாளர்களும், தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். விசேடமாக வடக்குத் தேர்தல்கள் முதல்முறையாக நடைபெறுவதால் அம் மாகாணத்தில் பெருமளவு மக்கள் திரண்டு வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

ஏனைய இரு மாகாணங்களையும் விட வடக்கில் சர்வதேசத்தின் பார்வை அதிகமாக இருந்ததைக்காண முடிந்தது. எனினும் அங்கு தேர்தல்கள் மிக அமைதியாக நடந்தேறின.

### ஸ்ரீலங்கன் விமானம் திடீர் தரையிறக்கம்

விமானப்பயணிகள் இருவர் மேற்கொண்ட அச்சுறுத்தலால் ஸ்ரீலங்கன் விமானம் ஒன்று அவசர தரையிறக்கத்தை ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் மேற்க்கொண்டுள்ளது. ஏர்பஸ் யு330267 பயணிகளுடன் பயணித்த போதே ஹீத்ரு விமான நிலையத்தில் அவசர தரையிறக்கத்திற்கான அனுமதியைக் கோரியது. எனினும் விமானம் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே தரையிறங்க அனுமதிக்கப்பட்டது. இவ்விமானம் கொழும்பில் இருந்து ஹீத்ரு நோக்கி பயணம் செய்தது. இரு பயணிகளின் சந்தேகத்திற்கு இடமான நடத்தை காரணமாகவே இத்திடீர் தரையிறக்கம் நிகழ்ந்துள்ளது. அவ்விரு பயணிகளையும் எஸ்ஸெக்ஸ் காவல்துறையினர் கைது செய்த பின் இவ்விமானம் தனது பயணத்தை தொடர்ந்துள்ளது.

### 80 மில்லியன் பெறுமதியான காலவதியான உணவு

கொட்டகென பிரதேசத்தில் நடாத்தப்பட்ட தேடுதலின்போது சுமார் 80 மில்லியன் பெறுமதியான காலாவதியான உணவுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் கைப்பற்றப்பட்ட மிகக் கூடுதலான காலாவதியான பொருட்களிலே இதுவே எனத் தெரியவருகின்றது. தற்போதும் உணவுத் தரக் கட்டுபாட்டாளர்கள் அவ்வுணவுப் பொருட்களின் காலாவதித் திகதிப் பட்டைகளை பரீட்சித்து வருவதாகவும் அந்நடவடிக்கை முடிவடைந்த பின்னரே அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்கு சமர்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலம்பெயர் பறவைகளுக்கு ஆபத்து

நாட்டின் ஈரநிலப் பகுதிகளில் பெரும்பாலான புலம்பெயர் பறவைகள் வந்து போவது வருடாவருடம் நிகழ்வதாகும் எனினும் அப்பறவைகளுக்கான அபத்து இலங்கையரின் நடவடிக்கைகளால் பேராபத்தை எதிர்கொண்டுள்ளது. வயல் நிலங்களுக்குப் பாய்ச்சப்படும் நன்னீர் சதுப்பு நில ஏரிகளடன் கலப்பதால் அச்சதுப்பு நில ஏரிகளின் உவர்தன்மை குறைவடையத்தொடங்கு கின்றது. இவ்வாறு நிகழ்ந்தால் சதுப்பு நில உவர்ப்பில் உருவாகும் புலம்பெயர் பறவைகளின் உணவு அருகிவிடுவதால் உலம்பெயர் பறவைகள் இலங்கைக்கு வருவதை குறைத்துக் கொண்டுள்ளன.

### அரசு வடக்கில் தோற்றால் பிரிவினைவாதமே வெல்லும்.

வடமாகாண வபைத்தேர்தலில் அரசால் வெல்லமுடியாது போய்விட்டால் அரசிற்கு பிர்வினை வாதத்தை எதிர்கொள்ளும் சவால் இருக்கும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

## The Sunday LEADER

### வடக்கின் தேர்தலில் இராணுவத் தலையீடு என குற்றச்சாட்டு

தேர்தல்காலங்களின் போது இராணுவம் கடுமையான தலையீடுகளை மேற்கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அத்துடன் இராணுவம் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததாகவும், குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்க்கு வாக்களிக்க வேண்டாம் என, எழுதப்பட்ட கடிதங்கள் பல வாக்காளர்களுக்கு மன்னார் மாவட்டத்தில் அனுப்பப்பட்டுள்ளதாக பேராயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

அவதானிப்பாளர்களும் அவ்வாறான தகவல்களைத் தாம் பெற்றுள்ளதாகவும், வடக்கில் மேலும் சில இடங்களில் அந்தரமான நிலைமைகள் தொடர்பாகவும், தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக தெரியவருகின்றது.

### "லங்கா" அறிக்கையினை கருத்தில் கொள்கின்றது, கனடா

" லங்கா" அறிக்கையினை அங்கத்துவ நாடுகளுக்கு இடையே பகிர்வதில்லை என பொதுநலவாய அமைப்பு நாடுகளின் செயலகம் எடுத்துள்ள முடிவு தொடர்பாக கனடா தனது கரிசனையை வெளியிட்டுள்ளது.

''லங்கா'' அறிக்கையானது இலங்கையில் பதவி பறிக்கப்பட்ட பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா தொடர்பான விசாரணைகளின் முடிவுகளைக் கொண்ட அறிக்கையாகும். இவ்வறிக்கை அரசின் ஒழுங்கற்ற நடவடிக்கைகள் தொடர்பான பலதகவல்களைக் கொண்டிருப்பதுடன் பதவி பறிப்பு நடவடிக்கையை வன்மையாக கண்டித்திருப்பதாகவும் தெரிகின்றது.

### பாதீடோ, உரிய திட்டமோ இன்றி பொதுப் பணத்தில் பல்பொருள் அங்காடி

உரிய திட்டமோ, அதற்கான செலவுப் பாதீடோ இன்றி பொதுமக்கள் பணத்தில் மிகபெரிய பல்பொருள் அங்காடியை நிர்மாணிக்கும் திட்டமொன்றை கோட்டை நகர மேயர் முன்னெடுத்துள்ளார்.

இவ் அதிசொகுசு பல்பொருள் இங்காடி வெலிக்கடைப் பிரதேசத்தில் இமைக்கப்படவுள்ளது. இத் திட்டமானது நல்லதொரு எண்ணமாக இருப்பினும் உரிய முன்னேற்பாடுகள் இன்றி ஆரம்பிக்கப்படுவதால் பொதுமக்களின் பணத்தை விரயம் செய்யும் முயற்ச்சியாக இருந்துவிடும் என கோட்டை நகரசபை ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

### பொதுபோக்குவரத்து சேவைப் பேரூந்துகளே தேர்தலில் பயன்படுத்தப்பட்டன. – ஜே.வி.பி

பணக் கட்டுப்பாட்டை எதிர்கொண்டு நட்டத்திலோடும் இலங்கை போக்குவரத்து சங்கம் நடந்தேறிய மாகாணசபைத் தேர்தல்களால் மேலும் நட்டமடைந்துள்ளன என ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது. மூன்று மாகாணங்களிலும் நடைபெற்ற ஆளுங்கட்சி தேர்த பிரசாரங்களுக்காக மக்களை ஏற்றியிறக்கிய பொதுப் பேரூந்துகளாலேயே இவ்வாறு நட்டம் எழுந்துள்ளதாக போக்குவரவு ஊழியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

### சொத்துக்களை வெளியிடாத அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

தற்போது வரை தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வெளியிடாத அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளன. இம்முனைப்பில் சட்டத்தரணிகள் குழுவொன்று இறங்கியுள்ளதாகவும் அதற்கான திட்டவரையை அவர்கள் தயாரித்திருப்பதாகவும் அத்திட்டவரைவை அனுமதிக்காக சட்டவாளர் அங்கத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 08

01. உட்சுவாச வளியிலும், வெளிச்சுவாச வளியிலும் மாறா சதவீதத்தில் காணப்படும் வாயு யாது?
   1. ஒட்சிசன் 2. நைதரசன் 3. நீராவி 4. காபனீரொட்சைட்
02. வெற்றுக் கண்ணால் பார்க்கக்கூடிய கலம் எது?
   1. கிளெமிடோமோனஸ் 2. மதுவம் 3. கோழிமுட்டை 4. மனிதசூல்
03. விலங்குக்கலத்திலும் தாவரக்கலத்திலும் காணப்படும் அமைப்பு எது?
   1. கலச்சுவர் 2. முதலுருமென்சவ்வு 3. பெரிய புன்வெற்றிடம் 4. பச்சையவுருமணி
04. பச்சையவுருமணிகளைக் கொண்டிராத தாவரக்கலம் எது?
   1. காவற்கலம் 2. வேலிக்காற்கலம் 3. கடற்பஞ்சுக்கலம் 4. வல்லுருக்கலம்
05. தவளை தன் வாழ்க்கை வட்டத்தில் எவ் அமைப்பினை சுவாச அங்கமாக கொண்டிருக்காது?
   1. பூக்கள் 2. வாதனாளி 3. தோல் 4. வாய்க்குழி
06. ஒரு உயிரினம் பின்வரும் இயல்பைக் கொண்டிருந்தது
   அ. முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் ஆ. நுரையீரலினால் சுவாசிக்கும்
   இ. இளம் சூட்டு குருதியை உடையது
   1. ஓணான், ஆமை, கோழி 2. புறா, ஆமை, பல்லி
   3. வௌவால், பல்லி, பாம்பு 4. காகம், கிளி, மயில்
07. சுகதேகி ஒருவரின் குருதியமுக்கத்தை சரியாகக் காட்டுவது?
   1. $120/80\ mmHg$ 2. $80/120\ mmHg$ 3. $100/120\ mmHg$ 4. $80/128\ mmHg$
08. உணவு வாய்க்குழியை அடைந்ததும் அங்கு நடைபெறும் இரசாயன மாற்றம் எது?
   1. உணவு வெட்டப்படல் 2. உணவு உமிழ்நீருடன் கலக்கப்படல்
   3. மாப்பொருள் உணவு மோல்ரோசாக மாறல்
   4. உணவு சுழ்நிலைக்கு மாறல்
09. ஒருவரின் சிறுநீரில் வெல்லம் இருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. இதற்கு அவரின் சிறுநீரை எந்நேரத்தில் பரிசோதித்தல் சரியான முடிவைத் தர சாத்தியமாகும்?
   1. தேநீர் அருந்த முன் எடுத்த சிறுநீர்
   2. காலை வேளையில் தேநீர் அருந்த முன் எடுத்த சிறுநீர்
   3. மாலை வேளையில் தேநீர் அருந்த முன் எடுத்த சிறுநீர்
   4. இரவு 10 மணிக்கு பின் எடுத்த சிறுநீர்
10. இதயத்தின் குருதிச் சுற்றோட்டத்தின் நோய் அல்லாதது?
   1. டெங்கு 2. மலேரியா 3. நீரிழிவு 4. இலுக்கேமியா
11. நீரினுள் இடப்பட்ட செங்குழியங்கள் வெடித்து சிதறியது. இதற்கான காரணம்?
   1. செங்குழியங்கள் ஒன்றுடனொன்று மோதியமை
   2. செங்குழியங்கள் அகப்பிரசாரணம் மூலம் நீர் உட்சென்றமை
   3. செங்குழியங்களில் புறப்பிரசாரணம் மூலம் நீர் உட்சென்றமை
   4. நீரில் செங்குழியங்களின் சுவர் கரைந்தமை
12. மூலகம் $A$ உருவாக்கும் அயன் ஆகும். இனது இருகாபனேற்றின் குறியீடு எனின், கல்சியம் இருகாபனேற்றின் குறியீடு யாது?
   1. $Ca(HCO_3)_3$ 2. $Ca(HCO_3)_2$ 3. $CaHCO_3$ 4. $Ca_2HCO_3$
13. $CuSO_4$ கரைசலினுள் $Cu$ கோல்கள் பயன்படுத்தி மின்பகுப்பு செய்த போது அவதானமாகப் பெறமுடியாதது எது?
   1. $CuSO_4$ கரைசலின் நீலநிறம் குறைவடையும்.
   2. அனோட் மின்வாய் செப்பு கரைதல்
   3. கதோட் மின்வாய் செப்பின் நிறை கூடும்
   4. கதோட்டில் $Cu$ படிவடைதல்
14. $Ca_3(PO_4)_2$, $CaF_2$ இன் ஒரு மூலக்கூறில் காணப்படும் $Ca$, $P$, , எனும் அணுக்களின் எண்ணிக்கை விகிதம் எவ்வாறு அமையும்?
   1. 2:1 1 4 2. 4 2 8 2 3. 4 2 2 2 4. 2 1 1 1
15. இரதபோட்டின் அணுமாதிரியைக் கண்டறிய பொற்றகடு பயன்படுத்தியதன் காரணம் அல்லாதது எது?
   1. பொன் வாட்டத்தகவுடையதாக இருத்தல்
   2. கரு ஏற்றம் கூடியதாக இருத்தல்
   3. கதிர்த் தொழிற்பாடு அற்றதாக இருத்தல்
   4. விலை கூடியதாக இருத்தல்
16. உலோக இணை ஒன்றில் , உலோகங்கள் காணப்படுகின்றன. இதில் $A$ , இனது மூல் சதவீதம் 2 : 3ஆகும். இவ் இணையில் இவ்வுலோகங்களின் திணிவு சதவீதம் யாது? ( ) ( $A$ இனதும், இனதும் சாரணுத்திணிவு $60\,gmol^{-1}$, $24\,gmol^{-1}$ )
   1. 5:2 2. 5 3 3. 3 5 4. 8 12

### பாடம் - கணிதம், 08

**பகுதி 01**

01. 3, 5, 6, , 7, 4, 2 என்னும் எண்களை அவதானித்து 3 ஆக இருக்கும் போது ஆகாரம், இடையம் என்பனவற்றைக் காண்க.
02. என்னும் சமனிலித் தீர்வை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.
03. சுருக்குக. $\dfrac{x^2-2x+1}{5(x-1)}$
04. $(5x+3)^2$ எனும் கோவையை விரித்து எழுதுக.
05. $\left[\dfrac{6}{7}-\dfrac{1}{2}\right]\times 2\dfrac{4}{5}$
06. வென்வரிப்படத்தில் $A \cap B$ யை நிழற்றிக் காட்டுக.
07. விடையை நேர்ச்சுட்டியில் தருக.
08. 5 மனிதர் ஒரு வேலையை 6 நாட்களில் முடித்தால் 3 மனிதர் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?
09. 1: 10000 என்ற அளவிடையில் வரையப்பட்ட ஒரு அளவிடைப் படத்தில் இருபுள்ளிகளுக்கிடையிலுள்ள தூரம் 20 எனக் காட்டப்பட்டுள்ளது. இப்புள்ளிகளுக்கிடையிலான உண்மைத் தூரம் இல் எவ்வளவு?
10. எனும் சார்பின்
   1. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு யாது?
   2. சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
11. ஒரு விளையாட்டுக் குழுவில் இருந்த சில மாணவர்களின் இடைநிறை $41\,Kg$ ஆக இருந்தது. இவர்களுடன் ஒவ்வொருவரும் $51\,Kg$ நிறையுடைய 3 மாணவர்கள் இணைந்து கொண்டனர். இவர்கள் அனைவரினதும் இடைநிறை 43 ஆகக் காணப்பட்டது எனின், ஆரம்பத்தில் இருந்த மாணவர்கள் எத்தனை பேர்? (ஆரம்பத்தில் இருந்த மாணவர்களை $a$ எனக் கொள்க.)

**பகுதி 02**

01. அ வும் ஆ வும் 40000 ரூபாவும் 30000 ரூபாவும் முதலிட்டு ஒரு வியாபார த்தை ஆரம்பித்தனர். மூன்று மாதங்களின் பின்னர் இ என்பவர் 85000 ரூபா முதலிட்டு இவ் வியாபாரத்தில் இணைந்து கொண்டார். வருட இறுதியில் இவர்களுக்கு 52000 ரூபா இலாபம் கிடைத்தால், ஒவ்வொருவரும் பெறும்
   1. இலாப விகிதம் யாது?
   2. இலாபத்தை தனித்தனியாகக் காண்க.
   3. இ பெறும் இலாபத்தை மொத்த இலாபத்தின் சதவீதமாகத் தருக.

02.
1. 3க்கும் 23க்கும் இடையில் நான்கு கூட்டல் இடைகள் தருக.
2. ஒரு கூட்டல் விருத்தியின் முதலாம் உறுப்பு 7 கடைசி உறுப்பு 79 ஆகவுள்ள விருத்தியில் கூட்டுத்தொகை 1075 ஆவதற்கு முதலாம் உறுப்பில் இருந்து எத்தனை உறுப்புக்கள் எடுக்க வேண்டும்?
3. இரண்டாம் உறுப்பு -12, எட்டாம் உறுப்பு 6 ஆகவும் உள்ள ஒரு கூட்டல் விருத்தியின்
   அ. பொதுவித்தியாசம் யாது?
   ஆ. எத்தனை உறுப்புக்களின் கூட்டுத்தொகை பூச்சியமாகும்?
4. கிடைத் தரையில் இருந்து மேலே பறக்கவிடப்பட்ட பட்டம் ஒன்று குறிப்பிட்ட உயரத்தில் பறக்கும் போது நூலுக்கும் தரைக்கும் இடையில் உள்ள கோணம் ஆகும். நூலின் நீளம் $60\,m$ ஆயின், பட்டம் தரையில் இருந்து எவ்வளவு உயரத்தில் பறக்கும்? (திரிகோண கணித விதியைப் பயன்படுத்தவும்)

03. எனும் சார்புக்கு ( $x=-4$ தொடக்கம் 4)
   1. அட்டவணையை தயாரிக்குக.
   2. வரைபு வரைக
   3. சமச்சீர் அச்சின் சமன்பாடு என்ன?
   4. சார்பின் இழிவுப் பெறுமானம் என்ன?
   5. திரும்பல் புள்ளியின் ஆள்கூறு என்ன?
   6. உமது வரைபைக் கொண்டு $\sqrt{5}$ பெறுமானத்தைக் காண்க.

04.
1. $PQ = 8cm$ , , $QR = 6cm$ ஆகவுள்ள முக்கோணியை வரைக.
2. , $PR$ ஆகியவற்றின் இரு சமவெட்டிச் செங்குத்துக்களை வரைந்து சந்திக்கும் புள்ளியை எனப் பெயரிடுக.
3. $O$ வை மையமாகக் கொண்டு $OP$ ஐ ஆரையாகக் கொண்டு வட்டம் வரைக.
4. வட்டத்தின் விசேட பெயர் என்ன?
5. ஆரையின் பெறுமானம் என்ன?

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்.
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புல்லிகுளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 9 பாடம் - வரலாறு

01. 1 ஆம் உலகமகாயுத்த கால முடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட்ரோ வில்சன்

02. இரண்டாம் உலகமகா யுத்தத்தில் "அச்சு நாடுகளின்" கூட்டணி
1. ர்ஷ்யா, யப்பான், ஜேர்மனி 2. பிரான்ஸ் யப்பான், ஜேர்மனி
2. ர்ஷ்யா, இற்றாலி, ஜேர்மனி 4. இத்தாலி, யப்பான், ஜேர்மனி

**வினா 01**

அ. பகுதி (அ) இன் கீழ்தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களை இலங்கைப்படத்திலும் (ஆ) இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

அ. மாணிக்கக்கங்கை, கலாஓயா, மகாகம, கொட்டியாரம், நல்லூர், லங்காபட்டுன, சேனநாயக்க சமுத்திரம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, ஊராத்தோட்டை, பொம்பரிப்பு

ஆ. பனாமா கால்வாய், கல்கத்தா, கோவா , பாரிஸ், எதியோப்பியா, இஸ்லாமாபாத், ஈராக், ஸ்ரேல்

ஆ. கீழே யுஇடிஇஉஇனு ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவர்கள் முறையே அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

1 - இலங்கையின் கரையோரத்தை ஆங்கிலேயர் கைப்பற்றும் போது கண்டி மன்னன்
2 - இலங்கை தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்
3 – பாகிஸ்தான் என்ற ஒரு தனிநாடு உருவாகக் காரணமானவர்
4 - இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி

*(வில்லியம் கோபல்லாவ , அல்லாமல் இக்பால் , து.சு ஜெயவர்த்தன ,முகமது அலி ஜின்னா, சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாச்சலம், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன், இராஜாதி இராஜசிங்கன்)*



இ. 1. படத்தில் காட்டப்பட்டிருக்கும் கலையம்சம் எது?
2. இது எக்கலை அம்சத்திற்கு சிறப்புப் பெற்றது?
3. காணப்படும் இடம் எது?
4. எம்மன்னன் காலத்தில் செதுக்கப்பட்டது?



ஈ. 1. படத்தில் காட்டப்பட்டிருக்கும் ஓவியம் எது?
2. வரைந்த ஓவியர் யார்?
3. இது காணப்படும் நாடு எது?
4. இன்று அது வைக்கப்பட்டுள்ள இடம் எது?

**வினா 02**

i. பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களைத் தருக.
அ – மகாவலி கங்கையை மறித்து மினிப்பே அணையை அமைத்தல்
ஆ – நுண்ணளவுத்திட்டத்துக்கமைய நிலத்தின் மென்சாய்வை பயன்படுத்தி கால்வாய் அமைத்தல்
இ – திஸ்ஸவாவியிலிருந்து ரன்மசு பூங்காவுக்கு சுரங்கவழியாக நீரை கொண்டு செல்லல்

ii. பின்வரும் அ, ஆ, இ, ஈ என குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை ஆற்றும் குளத்தின் பகுதிகளைத் தருக.
அ – குளத்தின் மிகையான நீரை வெளியேற்றல்
ஆ – குளத்தின் நீர் மடையினூடாக செல்லும் போது ஏற்படும் அமுக்கத்தை குறைத்தல்
இ – குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாத்தல்
ஈ – குளத்து நீர்மட்டம் குறைவாக இருக்கும் போது நீரை கால்வாய்க்கு விடுவித்தல்

iii. இலங்கையில் பொலநறுவை ஆட்சியாளர்களுள் நிஸ்ஸங்கமல்லமன்னன் முக்கியத்துவம் பெறுகிறான் என்பதை இரு விடயங்கள் கொண்டு விபரிக்க

iv. நீர்வளநாகரிக காலத்தில் மேம்பட்ட பொருளாதாரக் கோலம் இருந்தது என்பதை: அ – விவசாயம்,
ஆ – கைத்தொழில்
இ – வர்த்தகம்
ஆகிய துறையின் ஊடாக சுருக்கமாக விளக்குக.

ஆசிரியர் : த. அகிலன், Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 03

பிரதீபா

01. பின்வரும் எந்த இலைகளை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்வதால் புற்றுநோய் வரக்கூடும்?
1. இறம்பை 2. கொத்தமல்லி 3. சலாது 4. கோவா

02. எந்தவித மணத்தையும் கொண்டிராத பூஎது?
1. எக்சோரா 2. பவளமல்லிகை 3. தாழம்பூ 4. ரோசா

03. பற்றும் வேரைக் கொண்டதும் மரங்களில் படர்ந்து காணப்படுவதுமான தாவரம் எது?
1. வெற்றிலை 2. குறிஞ்சா 3. கொவ்வை 4. திராட்சை

04. பின்வரும் பழங்களில் ஒன்றை கையால் தொடும்போது பழத்தினுள்ளே உள்ள வித்துக்கள் வெடித்துச் சிதறும் பழம் எது?
1. ஆமணக்கு 2. காசித்தும்பை 3. எருக்கிலை 4. இறப்பர்

05. தாவரவேரை அரித்து சேதமாக்கும் பிராணி எது?
1. எறும்பு 2. கறையான் 3. மண்புழு 4. வண்டுகள்

06. தாவரங்களின் ஒளித்தொகுப்பின் போது உள்ளெடுக்கும் வாயுவும், வெளிவிடும் வாயுவும் எவை? ................................

07. எந்தத் தாவரத்தின் இலையை கையால் தொடும் போது இலைகள் சுருங்கிக் கொள்ளும்? அதற்கான காரணம் என்ன?

08. அரைவாசி நீரைக் கொண்ட போத்தலினுள் உலர்ந்த மண் கட்டியை இட்ட போது வளிக்குமிழிகள் வெளி வந்தமைக்கு காரணம் என்ன?

09. நிலத்தில் வளரும் புற்களை சிரட்டையினால் மூடி வைத்து சில மணி நேரத்தின் பின் உமது அவதானம் யாது?

10. ஒரு தாவரக் கிளையை ஒரு பொலித்தீனினால் மூடி கட்டி, சில மணி நேரத்தின் பின் உமது அவதானம் என்ன?

11. ஒவ்வொரு 10மீற்றருக்கும் ஒரு தூண் வீதம் நடப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் 20 தூண்கள் காணப்படின், முதலாவது தூணுக்கும், கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?
1. 210 மீற்றர் 2. 200 மீற்றர் 3. 190 மீற்றர்

12. "EXIT" என்ற சொல்லை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விதம் எது?
1. TIXE 2. TIXƎ 3. EXI ⊥ 4. TEXE

13. ஒரு வியாபாரி தேயிலையை மொத்தமாக வாங்கி, அதனை 100கிராம் பொதிகளாக்கி சில்லறையில் விற்பனை செய்வார். 4கி 500கிராம் தேயிலையிலிருந்து பொதி செய்யக்கூடிய 100கிராம் பைக்கற்றுக்களின் எண்ணிக்கை?
1. 50 2. 45 3. 40

14. அருகில் தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி விடை தருக.




1. ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் எது?
2. ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண் எது?
3. மிகப் பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?
4. மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய வேறு எண்களை எழுதுக.
5. நீங்கள் ஆக்கிய எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.
6. நீங்கள் ஆக்கிய எண்களை இறங்குவரிசைப்படுத்தி எழுதுக.

15. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கி எழுதுக.
1. மானவர்கல் பரீட்சையில் சிரந்த பெருபேறுகளைப் பெற்றணர்.
2.அவர்கள வீட்டிற்குல் நுளைந்தார்கள்
3. அரிஞர்கள் கனணியை 'இலத்திரனியல் முட்டால்' என அளைக்கின்றார்கள்.
4. ஓலிம்பிக்கொடி வெள்ளை நிரத்துணியாள் ஆனது.
5. போட்டியாலர்களின் அனிவகுப்பு நடைபெறும்.

16. நீண்ட, பெரிய, சிறிய போன்ற சொற்களை வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம்?
1. பெயர்ச்சொல்லாக 2. வினைமுற்றாக 3. அடைமொழியாக

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 19 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நாளும் ஒரு நபி மொழி

### எல்லோரையும் விட அதிக வெறுப்புக்குரிய நபர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். கடுகளவேனும் பெருமை எவர் உள்ளத்தில் இருக்கிறதோ, அவர் சுவனம் புகமாட்டார். உடனே ஒரு தோழர் தனது ஆடை, காலணிகள், நல்லதரமானவைகளாகவும் சுத்தமானவைகளாகவும் இருப்பதை நான் பிரியப்படுகிறேன். இவ்வாறு பிரியப்படுவது பெருமையாகுமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இல்லை (இது பெருமையாகாது) அல்லாஹ் மிக அழகானவன் (அவ்விதமே) அழகாயிருப்பதையே விரும்புகின்றான். தனது அடியார்கள் மீது தனது அருட்கொடைகளின் அழகுகள் வெளிப்படுவதை பார்க்க விரும்புகிறான். வசதி (செல்வம்) இருக்க ஏழையைப் போன்று நடிப்பது அல்லாஹ்வுக்கு பிடித்தமானதல்ல.

ஒரு தடவை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடத்தில் "யா அல்லாஹ்! படைப்பாளிகளிலேயே உனக்கு மிக வெறுப்பானவர் உனது கோபத்திற்குரியவர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ் "யாருடைய உள்ளத்தில் பெருமை உள்ளதோ, இன்னும் நாவு கடினமானதாக இருக்கிறதோ, கை கஞ்சத்தனமுடையதாக இருக்கிறதோ, நம்பிக்கை பலகீனமாக இருக்கிறதோ, அவர்தான்" என்று பதிலளித்தான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். " பணிவுடன் நடந்து கொள்பவருக்கு நீங்களும் பணிவு காட்டுங்கள். பெருமை காட்டுபவர்களிடம் பணிவைக் காட்டாமல் பெருமையை (பகட்டாக) வெளிப்படுத்துங்கள். ஏனெனில் இவ்வாறு நீங்கள் பணிவின்றி பெருமை வெளிப்படுத்துவது பெருமைக்காரர்களுக்கு இழிவையும் தாழ்மையும் ஏற்பட காரணமாகும். (அவர்களது பெருமைக்கு அருமருந்தாகும்) எனவே உங்கள் விஷயத்தில் அது தருமம் செய்த நன்மையாக எழுதப்படும் " என்றார்கள்.

## பெண்களைப் பற்றி ஹதீஸ்களில் கூறப்பட்டவை.

★ உத்தம மனைவி, கணவன் ஆசையோடு தன்னைப் பார்க்கும் போது அவனை மகிழ்விப்பாள். அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவர்ள். அவள் விருப்பத்திற்கு விரோதமாக நடக்கமாட்டாள். அவன் உடமைகளை பாதுகாப்பாள்.



★ தன் கணவரோடு கோபித்துக் கொள்ளும் மனைவின்யின் மீது அல்லாஹ்வின் சாபம் இறங்கும்.

★ அதிர்ச்சி தரும் செய்திகளை கேட்டதும் முதிர்ச்சித்து விழும் இயல்பு பெண்மைக்கே உண்டு.

★ மனைவிக்கு உணவு, உடைக்காகச் செலவு செய்வது, தானதருமம் செய்வதை விடச் சிறந்ததாகும்.

★ நல்ல மனைவியும், நல்ல வீடும், நல்ல வாகனமும், மனிதர்களுக்கு மிகவும் அதிஸ்டம் சேர்பனவாகும். கெட்ட மனைவியும், கெட்ட வீடும், கெட்ட வாகனமும் துரதிர்ஷ்டமானவையாகும்.

★ கணவனுக்கு கீழ்ப்படியாத மனைவியின் தொழுகை அவளுடைய சிரசுக்கு மேல் உயர்த்தப்படுவதில்லை (ஏற்கப்படுவதில்லை)

★ கணவன் விருப்பத்துக்கு மாறாக வீட்டை விட்டு வெளியில் செல்லும் பெண்ணை வானிலுள்ள அமரர்கள் அனைவரும் சபிக்கின்றனர். போகும் வழியில் மனிதர்கள், ஜின்கள் தவிர உள்ள யாவும் அவளை சபிக்கின்றன.

★ இறைவனைத் தவிர மனிதனையும் வணங்குவதற்கு அனுமதியிருக்குமாயின் கணவனின் பாதங்களை தொழுவதற்கு கட்டளை இட்டு இருப்பேன்.

★ பெண்களின் பார்வையை கண்டபடி சுழல விடாதே! அதற்குக்கு திரைபோட்டுவை. இது அவர்களுக்கு நிச்சயம் நன்மையை செய்யும்.

## உணரப்படாத தீமைகள்

இன்றைய சமுதாயப் பெண்களிடையே வெட்கம், ஒழுக்கம் பண்பாடு இவையெல்லாம் எடுபட்டுப்போய் கொண்டிருக்கின்ற காலம் அவர்கள் ஷைத்தானை வழிபடுவதிலும் ஷைத்தானையும் ஷைத்தானுடைய செயல்களையும் நேசிப்பதின் மூலம் அவனுடைய நேசர்களாக ஆகிவிட்டனர்.

இத்தகைய பெண்கள் ஆண்களை அடக்கி தம்முடைய ஆதிக்கத்திற்குட்படுத்தி விட்டார்கள். நீரும் நெருப்பும் எவ்வாறு ஒன்று சேராதோ இதைப்போன்று அக்காலப் பெண்களுடைய குணநலன்களும் இக்காலப் பெண்களின் குணநலன்களும் விந்தையான செயல்களும் ஒன்று சேர முடியாது. ஆனால் எல்லாப் பெண்களும் அவ்வாறில்லை.

### இக்காலத்துப் பெண்களின் நிலை என்ன?

மேலும் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட பல செயல்களை செய்வதில் பெண்கள் சமுதாயம்தான் முன்னணியில் இருக்கிறது, என்பதை யாரும் மறுக்கமுடியாது. மாற்று மதத்தினர்கள் கடைப்பிடிக்கும் எத்தனையோ காரியங்களை இன்று பெண் சமுதாயம்தான் செயல்படுத்தி வருகிறது. திருமணம், வீடு குடிபுகுதல், காது குத்துதல், பெண்கள் சடங்காகுதல் இவை போன்ற விஷயங்களுக்கான தேவையற்ற சடங்குகள் சூனியம், சாஸ்திரம்,சோதிடம்,குறி போன்ற மார்க்கத்தில் தடைசெய்யப்பட்ட பல காரியங்களை ஆண்களைவிட பெண்கள்தான் துணிந்து செய்கின்றார்கள்.

இதனால் பெண்களின் அந்தஸ்தும் உயர்வும் பற்றி பல அல்குர்ஆன் வாசகங்கள் மிக அழகாக சித்தரித்துக் காட்டியுள்ளது. எனவே இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து பெண்களாகிய நாம் தவிர்ந்து நடப்பது கடமையாகும். பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் அன்றைய காலத்துப் பெண்கள் இஸ்லாத்திற்காக செய்த தியாகங்கள் எத்தனை. அல்லாஹ்வையும் எம்மையும் ஒப்பிட்டு பார்த்கையிலே நாம் வாழ்கின்ற இக்கால நிலை எவ்வாறு இருக்கின்றது என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## சரும நோய்களை அடையாளம் காண....

*நோய்களும் ஆரம்ப நிலை அறிகுறிகளும்*

1. **சொறி - சிரங்கு** :- மிகச்சிறிய விரலிடுக்குகள், மணிக்கட்டு, இடுப்பு போன்ற பகுதிகளில் அதிக எரிச்சலுடன் தோன்றும் புண்கள்
2. **பாக்டீரியாக்களினால் ஏற்படும் இன்ஃபெக்ஷன்** :- சீழுடன் கூடிய பரு அல்லது புண் இவைகள் அதிக பட்சம் பூச்சிகள் கடித்த இடங்களில் ஓயாமல் சொறிவதால் ஏற்படுகிறது.
3. **சிரங்கு** :- பளபளப்பாக - மஞ்சள் நிறப் பொடுகுடன் வேகமாகப் பரவும்.
4. **முகப்பருக்கள்** :- பருவ வயதுகளில் பெரும்பாலும் முகத்தில் எண்ணெய்ப்பசை மிகுந்த சருமத்தில் ஏற்படுவது. இவைகளைக் கிள்ளுவதால் அதிகமாகப் பரவும் நிரந்தர வடுக்களும் ஏற்படும்.
5. **மேகப்புண்** :- ஆண்களுக்கு உயிர் நிலையில் ஏற்படும் இந்தப் புண்ணில் அரிப்போ / வலியோ இருக்காது.
6. **பெரிய திறந்த புண்** (இது பெரும்பாலும் நீரிழிவு நோயாளிக்கு ஏற்படுவது) :- கணுக்கால் அல்லது அந்தப் பகுதிக்கு அருகில் ஏற்படும் ஆறாத புண்கள்

*சரும நோய்களுக்கு யுனானி மருத்துவம்*

நமக்கு நிறத்தையும் அழகையும் தரும் நம் சருமம் நம் ஆரோக்கியம் காக்கவும் துணை செய்யும்.

***"நம் ஆரோக்கியம் காக்கத் துணை செய்யும் நம் சருமத்தில் ஏற்படும் சில முக்கியமான பாதிப்புகள் பற்றியும் - ஆரோக்கியத்தைத் தந்து ஆரோக்கியம் காக்கும் நம் சருமத்தின் பணிகள் பற்றியும் நாம் பார்க்கலாமா?***

வெய்யில், மழை, குளிர் என எல்லா பருவ காலங்களிலும் நம் உடலின் வெப்ப நிலையை ஒரே சீராக வைக்கும் பணி நம் சருமத்தைச் சார்ந்துள்ளது. நம் சருமத்தில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் வழியாக உடலில் உள்ள சில வேண்டாத கழிவுகள் வியர்வையாக வெளியேற்றப்படும் வியர்வையின் அளவு 500 மி.லி. இந்த அளவோ அல்லது அதற்குச் சற்று கூடுதலாகவோ நாம் தண்ணீர் பருக வேண்டியது மிகவும் அவசியம். இப்படி நாம் செய்யாத நிலையில் சருமம் உலர்ந்து போகும் வாய்ப்பு அதிகம்.

நோய்க் கிருமிகள் எதுவும் அண்டாதபடி நம் உள்ளுறுப்புக்களைப் பாதுகாக்கும் பணி நம் சருமத்தினுடையதே. தொடு உணர்ச்சியினை அறியும் நரம்புகள் நம் சருமத்தில் முடிவதால் தோல் மூலம்



இவ்வித உணர்ச்சிகளை அறிவதுடன் சில அதிர்ச்சிகளையும் தாங்கிக் கொள்வதும் இதனால் தான்.

ஒருவித எண்ணெய்ப்பசை போன்று சருமத்தில் ஒருவித திரவம் சுரப்பதால் அது எப்போதும் ஒருவித மினுமினுப்புடன் காணப்படும். சருமத்தில் உற்பத்தி செய்யப்படும் "டி" வைட்ட மின் ரிக்கட்ஸ் என்னும் ஒருவித நோய் ஏற்படாமல் காக்கிறது.

சிலருடைய சருமம் மிகவும் அதிகமான உணர்ச்சி கொண்டதாக இருக்கும். அதனால் அவ்வகை சருமம் உடையவர்கள் அடிக்கடி ஒவ்வாமை எனப்படும் அல்ஜிக்கு ஆளாக நேரிடும். வழக்கமாகப் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருக்களான சோப், பவுடர் போன்றவைகளை மாற்றி வேறுஒன்றைப் பயன்படுத்தினால் கூட அல்ஜியின் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடும் இப்படி அடிக்கடி அல்ஜியினால் பாதிப்பு ஏற்படும் "சென்சிடிவ் வகை" சருமம் கொண்டவர்கள் அடிக்கடி அழகு சாதனங்களை மாற்றிவிடாமல் இருப்பது நலம்.

அடுத்து பொதுவாக சருமத்தை பாதிக்கும் முக்கியமானதொரு நோய்தான் "எக்ஸிமா" எனப்படும் அரிப்பு நோய். உலக மக்கள் தொகையில் 1 முதல் 3 சதவிகிதத்தினர் இவ்வகை நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்கிறது ஒரு புள்ளி விவரம். இவ்வகை சரும பாதிப்பு உள்ளவர்களின் சருமம் சற்றே சிவந்து காணப்படும் சருமம் தடித்து சிவந்துள்ளதுடன் கொப்புளங்களும் காணப்படும். இப்படி ஏற்பட்டுள்ள கொப்புளங்களிலிருந்து சில சமயம் நீர் வடிவதுடன் அரிப்பும் அதிகமாகயிருக்கும். இவர்களின் சருமம் ஒரு வகை கடினத் தன்மை கொண்டதாகவும் இருக்கும். எளிதில் தொற்றக்கூடிய இந்த நோய் பெரியவர்களை மட்டுமின்றி குழந்தைகளையும் தாக்கக்கூடியது. இது குழந்தைகளைத் தாக்கும் போது உடல் முழுவதும் கூட கொப்புளங்கள் உண்டாகும் வாய்ப்பு உண்டு.

சருமத்தை பாதிக்கும் நோய்களில் இன்னொரு முக்கியமான நோய் "சொரியாசிஸ்" இது பெரும்பாலும் இளம் வயது கொண்டவர்களையே அதிகம் தாக்குகிறது. இவ்வகை பாதிப்புள்ளவர்களின் சருமம் மிகவும் உலர்ந்து காணப்படுவதுடன் சருமத்தின் மீது ஆங்காங்கே வெண்நிறத்தில் மீன் செதில்கள் போல்வும் காணப்படும். இவைகளின் ஓரங்கள் சிவந்த நிறத்தில் காணப்படும் "சொரியாசிஸ்" நோயிலும் சிவப்புநிற கொப்புளங்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டு. இவைகளைக் கிள்ளினால் இரத்தம் வரும். உடலில் முட்டி, முழங்கால் போன்ற மடிப்புப் பகுதிகள், மற்றும் விரல் நகங்களில் இந்த பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம். இந்த நோயின் பாதிப்பு ஏற்பட என்ன காரணம்? என்பது குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலைதான் இன்னமும் என்றாலும், சில பொதுவான காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வரக்கூடியது.
2. ஓயாத மன உளைச்சல்
3. பெண்களுக்கு கருவுற்ற போது ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள்
4. வசிக்கும் சுற்றுச் சூழலை அடிக்கடி மாற்றுவது.

ஆனால் சருமத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் மிகவும் அதிக தொல்லை தரக்கூடியது இந்த சொரியாசிஸ் நோய் என்பதுடன், இந்த வரை பாதிப்பினால் ஆளானவர்களின் அருகில் செல்லக்கூட மற்றவர்கள் அஞ்சுவர்.

இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உடனடியாக சிகிச்சைகள் எடுத்துக் கொண்டால் விரைவில் குணம் பெற முடியும். சருமத்தில் ஏற்படும் அனைத்து வகை பாதிப்புகளுக்கும் விரைவாக முழுமையாக குணம் தரவல்ல மூலிகை மருந்துகள் யுனானி முறையில் உண்டு. உள்ளுக்கு உண்ண மருந்துகள் தருவதுடன் வெளிப்பூச்சு மருந்துகளும் உண்டு. பாதிப்பின் காலத்திற்கு ஏற்ப 3 முதல் 6 மாதங்கள் வரை இவ்வகை யுனானி மூலிகை மருந்துகளைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டுவர நோயின் பாதிப்பிலிருந்து முழுமையாக விடுபட முடியும் என்பதுடன் மீண்டும் இந்த பாதிப்பு ஏற்படவும் செய்யாது.

**டாக்டர் கே.எல்.எம். நக்பர்**
**மருத்துவப் பொறுப்பதிகாரி**
**அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலை**
**நிந்தவூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தோற்றது ...

ஆரப்பித்து வைத்தபோதே இதனை செயலர் வெளிப் படுத்தியுள்ளார்.

இத் தோல்விக்கான பிரதான காரணியாக உறுப்பு நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை அடைய நினைத்த இலக்கை அடைவதற்கான அதரவை வழங்கவில்லை என்பதுடன் அந் நாடுகள் தமக்குத் தமக்கென இலக்குகளை நிர்ணயித்திருந்தமையால் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் முழுவதுமாகவோ அல்லது சரியாகவோ ஒரு முறைமையைப் பின்பற்ற முடியாமல் போய்விட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதல் முறையாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் போர்கால இலங்கையின் காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அனுகு முறையானது தோல்வியைத் தழுவியுள்ளது எனத் தனது திருவாய் மலர்ந்தருளியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே 68வது கூட்டத் தொடரில் உரையாற்றிய இலங்கையின் சனாதிபதி பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் பற்றிய அக்கறை என்ற போர்வையிலேயே வளரும் நாடுகளின் உள் விவகாரங்களில் சர்வதேச தலையீடு அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, இதனையிட்டு தான் கவலை கொள்வதாகவும் அவர் சுட்டிக் சாட்டியுள்ளார்.

"இத்தகைய முயற்சிகள் அந்தந்த நாடுகளில் நிரந்தர அரசியல் இருப்புக்கும் நல்ல மாற்றங்களுக்கும் அடிகோலி உள்ளதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் அப்படியான நல்ல நிலைமையை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் அதற்கு எதிர்மாறான நிலைமையையே உருவாக்குகிறது இதனால் பாதுகாப்பு சபையின் அதிகாரம் மீறப்படுகிறதா? இல்லையா?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்..

இதே வேளை இலங்கை தொடர்பாகத் தனது வாய்மொழி மூல சமர்ப்பிப்பைப் பொதுச்சபையில் மேற்கொண்ட மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் போர்க் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு நம்பகமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும், அதையும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் செய்யவேண்டும், அப்படி செய்யாவிட்டால் சர்வதேச சமூகம் தனியாக ஒரு விசாரணையை நடத்த வேண்டிவரும் என்று

## 13ம் நூற்றாண்டுக்..

பல்கலைக்கழக மாணவர்களும் இருந்தனர். வில்லூன்றிக் கந்தன் முன்றலில் காணப்பட்ட கல்வெட்டுக்களானவை முழுமையான கல்வெட்டுக்கள் என அறிய முடிந்துள்ளது. முழுமையான வாசகங்களாகச் செய்யுள் வடிவில் அமைந்துள்ள இவை நாலடிச் செய்யுள் முறையில் இருபது வரிகளுக்கும் மேற்பட்ட வடிவில் அவை அமைந்துள்ளன.

### 2ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் சேனையூரில்

சேனையூரின் வீரபத்திரர் கோவில் வளவில் பின்புறமாக உடைந்த புராதன காலக் கட்டடிமொன்றின் தூண்களில் அமைக்கப்பட்ட சாசனங்கள் பல கவனிப்பாரின்மையால் அழிந்து போய்க் கிடக்கின்றன. அவற்றுள் இரண்டு தூண்களில், சுமார் எட்டு அடி உயரமானவை, தமிழ்ப் பிராமி எழுத்துக்களுடன் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்த போது கி.பி 2ம் நூற்றாண்டுக்குரிய எழுத்துக்கள் அவை. இலங்கையிலே தூண் ஒன்றில் எழுதிய பிராமிச் சாசனங்கள் முதற் தடவையாகக் கண்டு பிடிக்கப்பட்ட இடம் இங்கே தான். ஏனையவை குகைகளிலும், இவை பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன.

அதனை வாசித்த போது வரியொன்றில் "வேலியன்" என்ற சொல்லும் மற்றொரு வரியில் "வாணிபன்" என்ற சொல்லும் காணப்பட்டன. இவ்வடையாளப் படுத்தல்கள் உறுதிப்படுத்தப்பட்டால் அக் கல்வெட்டுக்கள் தமிழ் வாணிபர்கள் வழங்கிய தானங்கள் தொடர்பானவை எனக் கருத இடமுண்டு என்று பேராசிரியர் தெரிவித்தார்.

## சுருக்குவலை மீன்பிடி - அகப்பட்டனர் மீனவர்கள்

திருகோணமலை மாவட்டத்தில் கட்டைப்பறிச்சான் பகுதியில் சட்டவிரோத முறையில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த 15 பேரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

26.09.2013 வியாழக்கிழமை நண்பகல் 12.45 மணியளவில் கட்டைப்பறிச்சான் பகுதியில் இருந்து சுமார் 7 கிலோ மீற்றருக்கு உட்பட்ட கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட வலைகளை கொண்டு (சுருக்கு வலை) மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 02 படகுகளையும், படகில் வந்த மூதூரைச் சேர்ந்த 15 மீனவர்களையும், கடற்படையினர் கைது செய்ததோடு மட்டுமல்லாது, சுமார் 1000 கிலோ மதிக்கத்தக்க மீன்களையும், நீரடி நீச்சலுக்கு பயன்படுத்தும் 03 ஒட்சிசன் கொள்கலன்களையும், அவர்களிடம் இருந்து கைப்பற்றி திருகோணமலை துறைமுக காவல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கிழக்கின் சிரேட்ட ....

ரூபாவை லஞ்சமாகப் பெற முயன்ற சார்ஜன் ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் கைதாகியதைத் தொடர்ந்து காத்தான்குடி காவல்துறை அலுவலகத்திற்கு வருகை தந்த கிழக்கின் சிரேட்ட பிரதிக் காவல் மா அதிபர் அங்குள்ளவர்கள் அனைவருக்கும் பொதுவான தண்டனையை வழங்கியிருந்தார்.

சுமார் 119 காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட இந்த முழந்தாளிடும் தண்டனை தொடர்பாகத் தகவல்கள் ஊடகமொன்றில் வெளியானதைத் தொடர்ந்து அலுவலர்களைத் தொந்தரவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் மீது விசாரணைகள் நடைபெற்றன.

இத்தகவலை ஊடகங்களுக்குக் கசிய விட்டது கிழக்கின் காவல்துறை சிரேட்ட அலுவலர் ஒருவரே என அவ்விணையத்தளம் தெரிவித்துள்ளது. செய்தியைக் கசிய விட்ட அச் சிரேட்ட அலுவலரின் பின்னே மேலும் மூன்று சிரேட்ட காவல்துறை மா பிரதி அதிபதிகள் செயற்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்துள்ள அவ்விணையத்தளம் அவர்கள் மூவரும் அடுத்த காவல்துறை மா அதிபராகப் பொறுப்பெடுக்கும் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

தண்டனைக்குட்படுத்தப்பட்ட காவல்துறை அலுவலர் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடொன்றைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனி மீனி நிகழ்ச்சித்திட்டப் பரிசளிப்பு விழா

றோட்டரிக் கழகம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய நீரழிவு நோய்க்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்பாட்டில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கான பரிசளிப்பு விழா 25.09.2013 காலை 10 மணியளவில் றோட்டரியன் தர்ஷன், ஜோன்,(மாவட்ட ஆளுநர், றோட்டரிக் கழகம்) தலைமையில் தி/ விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட றோட்டரிக் கழக உறுப்பினர்கள் திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் திரு.நா.விஜேந்திரன் சீனி மீனி நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜாராம் மோகன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற பாடசாலையாக தி/ விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டது. இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே பாணந்துறை, இப்பாகமுவப் பாடசாலைகள் பெற்றுக்கொண்டன. ஆட்கொல்லி நோயான நீரழிவினை இல்லாதொழிக்க பாடசாலைச் சமூகத்தின் ஊடாக முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுவதன் மூலம் நீரழிவு இல்லாத ஒரு சமுதாயத்தினை கட்டியெழுப்புவோம் என்பதே முன்வைக்கப்பட்ட கருத்தாக இருந்தது. தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் முதலாம் இடம் பெற பெரும்பாடுபட்ட சீனிமீனி நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் திருமதி பி. அருளேந்திரன் அதிபர் எம். முரளிதரன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டு, பாடசாலைக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும் அளிக்கப்பட்டன.

## வடக்கின் முதல்வருடன் ...

தமிழ்நாட்டின் முதல்வரான ஜெயலலிதா ஜெயராம் வடக்கின் முதல்வராகப் பதவிப் பிரமாணஞ்செய்யவுள்ள சி.வி. விக்னேஸ்வரனுடன் நேரடியாகக் கலந்துரையாடவுள்ளதாகச் செய்திகள் கசிந்துள்ளன.

எனினும் புதிய வடக்கின் முதலமைச்சரின் பதவிப் பிரமாணத்தின் பின்னரா, முன்னரா இக் கலந்துரையாடல் நிகழவுள்ளது என்பதைக் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

அவருடன் பேசுவதற்குப் பல முக்கிய விடயங்கள் இருப்பதாகவும் உடனடியாகவே அவ்விடயங்களைப் பேசத் தான் விரும்புவதாகவும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

## சூரன் மீன்...

பெசாரியார், சந்தைவீதி, மூதூர் 3ஐச் சேர்ந்தவர் எனத் தெரிய வருகின்றது. ஐம்பத்தாறு வயதான இவர் ஏற்கனவே இதய நோயாளி என்பதும். குறிப்பிடத்தக்கது.

## கண்ணாடிச் சில்லி....

காயமடைந்த இம் மாணவனை அருகிலுள்ள சாம்பல்தீவு வைத்தியசாலைக்கு ஆசிரியர் ஒருவர் உடனடியாக அழைத்துச் சென்ற போதிலும் அங்கு வைத்தியர் வராத காரணத்தினால் உடனடியாகவே அம்மானவனை முச்சக்கரவண்டியில் இட்டு திருகோணமலைப் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகத் தெரிகின்றது.







தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவிற்காக நாட்டிய நாடகத்தை அளிக்கை செய்த செல்வ இசை நடன சபா மாணவிகள் பயிற்சியில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் சித்த ஆயுர்வேத கண்காட்சி

சித்த ஆயுர்வேத வைத்தியசேவை தொடர்பான கண்காட்சி மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

மட்டு. புதுக்குடியிருப்பு சித்த ஆயுர்வேத ஆதார வைத்தியசாலையில் இம்மாதம் 30ஆம் மற்றும் 1ஆம் ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளது.

குறித்த வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கான மூலிகைகள் தொடர்பான அறிவூட்டல் மற்றும் சித்த ஆயுர்வேத வைத்திய சேவை, ஆரோக்கிய வாழ்க்கை முறை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி என்பன நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வுகள் இம் மாதம் 30ஆம்திகதி மற்றும் ஒக்ரோபர் 01ஆம்திகதி ஆகிய தினங்களில் வைத்தியசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு மத்தி கல்விப் பணிப்பாளரை இடமாற்றுக !

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றுமாறு கிழக்கின் ஆளுனருக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இவ்விடயம் தொடர்பாக ஏறாவூர் நகர சபையில் ஏகமனதான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமது கோரிக்கையை நேரடியாக ஆளுனரிடம் சமர்ப்பித்த ஏறாவூர் நகர சபைத் தலைவர், வலயக் கல்விப் பணிப்பாளரின் செயற்பாடு களாலேயே மத்தி கல்வி வலயத்தின் கற்றல் நடவடிக்கைகள் பெரும் பின்னடைவைச் சந்தித்து உள்ளன எனக் குற்றஞ்சாட்டி யிருப்பதாகவும் தெரிகின்றது.

# பட்டதாரிகளுக்கு நியமனம்

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 142 பயிலுனர் பட்டதாரிகள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் 30 பேருக்கு மாத்திரமே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கி வைக்கப்பட்ட நியமனத்தை மீனோடைக்கட்டு அசனார் லெப்பை மசீஹா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.



# கண்ணாடிச் சில்லினால் குத்தப்பட்டார் பாடசாலை மாணவன்....



26.09.2013 வியாழக்கிழமை காலை 7.30 மணி அளவில் தி / சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் 10 ம் தரத்தில் கல்வி பயிலும் சாம்பல்தீவு 4 ம் வட்டாரத்தை சேர்ந்த பிரசாத் (15 வயது) எனும் சிறுவன் பாடசாலையில் வைத்து சக மாணவன் ஒருவனால் கண்ணாடித் துண்டினால் குத்தப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கபட்டுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது .

காயமடைந்த பிரசாத் தெரிவிக்கையில் தான் தனது நண்பரான அர்ஜுனா என்பவரிடம் 30 ரூபாய் பணம் வங்கியிருந்ததாகவும் அதனை திருப்பி தருமாறு அவர் கேட்ட பொழுது தன்னிடம் பணம் இல்லாததால் நாளைக்கு தருவதாக சொன்னதை அந் நண்பரும் சம்மதித்திருந்ததாகவும் , அவரின் அருகில் இருந்த அவரது நண்பரான நிரோசன் என்பவர் திடீரென "உனக்கு வாங்கிய பணத்தை திரும்பி கொடுக்கமுடியாதா? " என கேட்டு கையில் வைத்திருந்த கண்ணாடி துண்டினால் தன்னை (விதை பையில் ) குத்தியதாகவும் தெரிவித்தார் .

தற்போது அவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அறுவைச் சிகிச்சைக்காக அவர் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

15

# தூய குவாடலூப்பே அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா 2013




திருகோணமலை சின்னக் கடைப் பகுதியில் அருட்தந்தை யோன் பீற்றர் அடிகளாரால் பங்குமக்களுக்கென வழங்கப்பட்ட வடகரை வீதியும் புகையிரத நிலைய வீதியும் சந்திக்கும் சேமக்கலை காணியில் " புனித குவாடலூபே அன்னை ஆலயம் " 1956ம் ஆண்டு கருங்கற்களால் மிகவும் அழகாகக் கட்டி முடிக்கப்பட்டது.

அத்துடன் மெக்சிக்கோ நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட குவாடலூப்பே அன்னையின் திருச் சொரூபமும் அதி. வணக்கத்துக்குரிய. ஆயர் இக்னேஷியஸ் கிளெனி S.J ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டு ஆலயத்தில் ஸ்தாபகமும் செய்யப்பட்டது. அச் சொரூபமே இன்றுவரை ஆலயத்திருவிழா வீதியோர பவனியில் வருடத்துக்கொரு முறை எடுத்துச் செல்லப்படுகின்றது.

1956ம் ஆண்டிலிருந்து இன்று வரை (2013) வருடம் தோறும் புரட்டாதி மாதம் இறுதி ஞாயிறு தூய குவாடலுப்பே அன்னையின் திருவிழாவானது பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருடம் திருவிழாவானது 20ம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒன்பது நாட்களும் மாலை திருச்செபமாலை வழிபாடும் அன்னையின் நவநாள் செபமும் சிறப்பு மறையுரையும், திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.




28ம் திகதி காலை பங்கு சிறார்களுக்கு முதன் நன்மை, உறுதிப்பூசுதல் மறை மாவட்ட ஆயரினால் வழங்கி வைக்கப் பட்டது. அன்று மாலை தூய குவாடலூப்பே அன்னை ஆலய பங்குத் தந்தையின் தலைமையில் அன்னையின் திருச் சொரூபம் பவனியாக ஆலயத் திலிருந்து திரு [illegible] பிரதான வீதி வழியாக சென்று வடகரை வீதி வழியாக ஆலயத்தை வந்தடைந்து அன்னை யின் ஆசீர்வாதத்தோடு, அன்றைய நிகழ்வுகள் முடிவடைந்தது.





29.06.2013 காலை திருநாள் திருப்பலிக்காக திருமலை ஆயர் அதி. வணக்கத்துக்குரிய. ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை வருகை தந்திருந்தார். இவரை தூய குவாடலூபே அன்னை திருத்தல பாண்டு வாத்தியக் குழுவினருடன் இணைந்து பங்குச் சமூகமும் புகையிரத சந்தியிலிருந்து கோலாகலமாக வரவேற்று வந்தனர்.

திருநாள் திருப்பலியானது ஆயரின் தலைமையில் அனைத்து குருக்களும் ஒன்றிணைந்து பக்தியுடன் ஒப்புக் கொடுக்கப்பட்டது.



தகவல்
பங்கு மேய்ப்புப் பணிச்சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org